வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu








Email : news@eelanadu.lk | மலர் : 03 | 10.02.2022 வியாழக்கிழமை | இதழ் : 67 | பக்கங்கள் : 16


## இலங்கை வருகின்றார் இந்திய பிரதமர் மோடி!



கொழும்பு, பெப். 10

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி எதிர்வரும் மார்ச் மாதம் இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளார் என இராஜதந்திர வட்டாரங்களை மேற்கோள்காட்டி, சிங்கள இணையமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை , இந்திய மீனவர் பிரச்னை உக்கிரமடைந்துள்ள நிலையிலும், இலங்கையில் சீனா ஆதிக்கம் செலுத்திவரும்

15

## இந்தியத் தூதரகம் கோரியமையால் பிரேரணையை கைவிட்டது முன்னணி!

### பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன்



கொழும்பு, பெப். 10

மீனவர்கள் பிரச்னையைத் தீர்க்க இந்தியா நடவடிக்கை எடுக்கும் என்று இந்தியத் தூதரக அதிகாரி உறுதியளித்தமையால் நேற்றையதினம் பாராளுமன்றில் கொண்டுவர இருந்த ஒத்திவைப்பு வேளை பிரேரணையை தவிர்த்ததாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் கூறுகையில்,

15

# பயங்கரவாத தடைச் சட்டத்தை முழுமையாக திருத்தவேண்டும்

## ஐரோப்பிய ஒன்றியம் மீண்டும் அழுத்தம்

பிரஸ்ஸல்ஸ், பெப்ரவரி 10

நடைமுறையில் இருக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை சர்வதேச நியமங்களுக்கு அமைவாக முழுமையாக திருத்துவதற்கு மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஐரோப் பிய ஒன்றியம் இலங்கை அரசை வலியுறுத்தியுள்ளது.

15



## தொற்றினால் மேலும் 36 பேர் உயிரிழப்பு!

கொழும்பு, பெப். 10

இலங்கையில் நேற்று முன்தினம் 36 கோவிட் மரணங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கொவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 15,692 ஆக அதிகரித்துள்ளது. (அ)

## முடிந்தால் அடுத்த தேர்தலில் எதிரணி வென்று காட்டட்டும்!

### பகிரங்க சவால் விட்டார் பிரதமர்



கொழும்பு, பெப். 10

சவால்களுக்கு மத்தியில் நாட்டில் பல்வேறு கடுமையான தீர்மானங்களை எடுக்க நேரிட்டது என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

முடிந்தால் எதிர்க்கட்சியை அடுத்த தேர்தலில் வென்று காட்டுமாறு சவால் விடுகிறேன் என அவர் கூறினார்.

அநுராதபுரத்தில் நேற்று இடம்பெற்ற பொதுஜன பெரமுன

15

### பெண்கள் 13 பேர் உட்பட

## வடக்கில் மேலும் 28 பேருக்கு தொற்று

யாழ்ப்பாணம், பெ. 10

பெண்கள் 13 பேர் உட்பட வடக்கில் மேலும் 28 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ். ஆய்வுகூடங்களில் நேற்று மேற்கொள்

15

## கொரோனா பரிசோதனை; கிளிநொச்சியில் நெருக்கடி!

கிளிநொச்சி, பெப். 10

கிளிநொச்சி மாவட்டத்தில் கொரோனா பரிசோதனை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக சுகாதார தரப்பு தெரிவித்துள்ளது.

மாவட்டத்தில் தற்போது 800 அன்ரிஜென்

15

## சாதாரண தர பரீட்சைக்கான விண்ணப்பத் திகதி நீடிப்பு!

கொழும்பு, பெப். 10

2021 கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட் சைக்கான விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதி எதிர்வரும் 17 ஆம் திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களை ஏற்கும் திகதி இன்று வியாழக்கிழமையுடன் நிறைவடையவிருந்த நிலையில்

15

## அரைக் காற்சட்டையுடன் பல்கலை. வந்த மாணவனை கண்டித்தவர் மீது தாக்குதல்!

யாழ்ப்பாணம், பெப். 10

அரைக் காற்சட்டையுடன் யாழ். பல்கலைக்கழகத்திற்குள் வந்த மாணவனை கண்டித்த சிரேஷ்ட மாணவன் யாழ். பல்கலைக்கு வெளியில் வைத்து தாக்கப்பட்டமை தொடர்பில் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

15

## நாட்டை மீண்டும் முடக்க இடமளித்துவிடவேண்டாம்!

### அனுராதபுரம் கூட்டத்தில் ஜனாதிபதி கோரிக்கை



கொழும்பு, பெப். 10

கொரோனா வைரஸ் தொற்று பரவலின் மத்தியில் நாட்டை மீண்டும் மூடுவதற்கு இடமளிக்க வேண்டாம் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று கோரிக்

15

## சர்வதேசத்தை ஏமாற்றுவதற்கே பயங்கரவாதச் சட்டம் திருத்தம்!

### சபையில் சாள்ஸ் எம்.பி. குற்றச்சாட்டு



கொழும்பு, பெப். 10

அரசால் முன்வைக்கப்பட்டுள்ள புதிய பயங்கரவாத தடைச்சட்ட முன்மொழிவானது, சர்வதேசத்தை ஏமாற்றுவதற்கான நகர்வாகும் என்று தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்ம லநாதன் தெரிவித்தார்.

நாட்டில் தற்போது அமுலில் உள்ள பயங்கரவாத தடைச்சட்டமும், புதிய முன்மொழிவும் ஒத்ததாகவே காணப்படுகின்

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

மறவன்புலவு சச்சிதானந்தன் குறித்து இந்தப் பத்தியில் பல தடவை குறிப்பிட்டிருக்கிறேன்.

அவரது சிவசேனை கட்சி பற்றிய கருத்து அல்லது, நடவடிக்கைகள் இந்த ஊர்க்குருவிக்கு உடன்பாடானது அல்ல என்பதையும் இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருக்கின்றேன். ஆனால், அவர் அவ்வப்போது தெரிவிக்கின்ற விடயங்கள் பல கவனிப்புக்குரியவை. சில மாதங்களுக்கு முன்னர் குருந்தூர் மலையில் புதிதாக புத்த விகாரை கட்டப்படுகின்றது என்று வெளிவந்த செய்திகளை சச்சிதானந்தன் மறுதலித்திருந்தார். உடனே அவர்மீது சிலர் கண்டனக் கணைகளை வீசியிருந்தனர்.

கடந்த சுதந்திர தினத்தன்று பாராளுமன்ற உறுப்பினர் எம். ஆபிரகாம் சுமந்திரனின் அறைகூவலின்படி எழுபத்தைந்து 'போராளிகள்' குருந்தூர் மலைக்கு எந்தவித எதிர்ப்பும், தடையுமின்றி சென்று வந்து, இலங்கையின் சுதந்திரத்திற்கு சான்று பகர்ந்ததை இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருந்தேன். அவ்வாறு சென்று வந்தவர்களில் ஒருவர்தான் சச்சிதானந்தன்மீது கண்டனம் தெரிவித்தவர்களில் முக்கியமானவர்.

அங்கு புதிதாக புத்த கோவில் கட்டப்படவில்லை என்ற மறவன்புலவரின் தகவலை மறுதலித்து, அங்கு புத்தர் கோவில் கட்டப்படுகின்றது என்று தெரிவித்திருந்த அந்த பிரமுகர், சுதந்திர தின விஜயத்தின் பின்னர் என்ன செய்திருக்க வேண்டும்? தனது மறுதலிப்புக்கு சான்றாக, புத்தர் கோவில் கட்டப்பட்டிருப்பதை புகைப்படங்களுடன் ஆதாரமாக வெளியிட்டிருக்க வேண்டாமா?

அதுதொடர்பில் ஏன் ஊடகங்கள் அவர்களிடம் கேள்வி எழுப்பவில்லை என்று சச்சிதானந்தன் இப்போது ஊடகர்களைப் பார்த்து கேள்வி எழுப்பியிருக்கிறார்.

கடந்த வாரம் பாராளுமன்ற உறுப்பினர்கள் மூவர், மற்றும் 75 ஆதரவாளர்களுடன் குருந்தூர் மலைக்குச் சென்றனர். அங்கே சிவன் கோவிலை வழிபட்டதாகச் சொல்கின்றனர். அப்பொழுது அங்கு புதிதாக புத்த விகாரம் கட்டப்பட்டு இருந்தால் அதை படம் எடுத்து வெளியிட்டு இருக்கலாம் அல்லவா? என்று அவர் கேட்பதில் நியாயம் இல்லாமல் இல்லை.

இவரது அறிக்கையில், 'எண் கோண சிவலிங்கம். ஆவுடையார் அற்ற சிவலிங்கம். 8 அடிக்கு மேல் நீண்ட சிவலிங்கம். மணி நாகன் என 2000 ஆண்டுகளுக்கு முந்தைய தமிழ் எழுத்தில் எழுதிய சிவலிங்கம். முன்பு அநுராதபுரத்தில் இவ்வாறு கண்டெடுத்த இதே அமைப்புடைய சிவலிங்கம். குருந்தூர் மலையிலும் அண்மையில் கண்டெடுக்கப்பட்டது அகழ்வாராய்ச்சியின் பொழுது.

அகழ்வாராய்ச்சிகள் தொடர்ந்து வருகின்ற நிலையில், புத்தபிக்குகள் அரசு சார்ந்தவர்கள் அங்கே சென்று வழிபட்டு வருகிறார்கள்.

சைவர்கள் அங்கு சென்று வழிபடத் தடையில்லை என அரசு அறிவித்திருக்கிறது. சுமந்திரன், சாணக்கியன், சிறிதரன் சார்ந்த 75 பேர் அங்கு சென்றபொழுது எந்தத் தடையும் இல்லை.

வெடுக்குநாறிமலை, குருந்தூர் மலை இரண்டும் சைவக் கோவில்களாக இருந்த மலைகள். பின்னர் புத்தருடைய விகாரங்கள் அமைந்தமை வரலாறு.

வெடுக்குநாறி மலையிலும் குருந்தூர் மலையிலும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய தமிழ் எழுத்துக்கள் உள்ளன.' - என்று அவரது அறிக்கையில் விபரிக்கப்பட்டுள்ளது.

அவரது இந்த ஊடக அறிக்கையை படித்தபோதுதான், அந்தச் சம்பவம் ஞாபகத்திற்கு வந்தது.

கிழக்கில் தொன்மைமிக்க சிவாலயங்களில் ஒன்றான கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் கோவிலுக்கு அந்த இளம் அரசியல்வாதி சில மாதங்களுக்கு முன்னர் சென்றிருந்தார். அவருடன் அவரது 'பழைய' அரசியல்வாதி நண்பர் ஒருவரும் சென்றிருந்தார்.

ஆலயத்தில் பூசகர் அவரை வரவேற்று அர்ச்சனை செய்து, காளாஞ்சி கொடுத்து அமர்க்களப்படுத்தி அனுப்பி வைத்தார். அர்ச்சகரே அவர் நெற்றியில் திருநீறு பூசி, சந்தனப் பொட்டும் வைத்து அனுப்பினார். அவரது பரந்த நெற்றியில் திருநீறும் பொட்டும் ஒரு கம்பீரத்தையே உருவாக்கியிருந்தது.

காருக்குள் வந்து அமர்ந்ததும், அவசரஅவசரமாக திருநீறையும் பொட்டையும் அழித்துவிட்டவாறு சொன்னார், "இந்த சாத்தானை இவ்வளவு நேரமும் நெற்றியில் வைத்திருக்கவேண்டி வந்துவிட்டதே"!

- ஊர்க்குருவி



## எட்டு இந்திய ட்றோலர்கள் பூநகரியில் ஏல விற்பனை

கிளிநொச்சி, பெப். 10

பூநகரி கிராஞ்சி பகுதியில் எட்டு இந்திய றோலர்கள் 94 ஆயிரத்து 300 ரூபாவுக்கு ஏலத்தில் விடப்பட்டன.

நேற்று கிராஞ்சி கடற்படை முகாம் பகுதியில் வைத்து குறித்த ட்றோலர் படகுகள் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகள் குழு முன்னிலையில் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டன.

ஏலத்தில் விடப்பட்ட அனைத்து படகுகளும் மீளப் பயன்படுத்த முடியாத நிலையில் சேதமுற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## ரிஷாத் எம்.பி வெளிநாடு செல்லலாம்

கொழும்பு, பெப். 10

நேற்று முதல் எதிர்வரும் 3 மாத காலத்துக்கு வெளிநாடு செல்ல பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனுக்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

இதன்படி, ரிஷாத் பதியூதீனின் கடவுச்சீட்டை வழங்குமாறு, கொழும்பு மேலதிக நீதவான் ரஜீந்ரா ஜயசூரிய உத்தரவு பிறப்பித்துள்ளார்.

ரிஷாத் பதியூதீனின் வீட்டில் பணிப் புரிந்த சிறுமியொருவர் உயிரிழந்த சம்பவத்தை அடுத்து, பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியூதீனுக்கு வெளிநாடு செல்ல நீதிமன்றம் அனுமதி மறுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## ஓய்வூதியம் மீதான வரி விதிப்பு; முன்னாள் சபாநாயகர் எதிர்ப்பு

கொழும்பு, பெப். 10

ஓய்வூதியத்தின் மீதான வரி விதிப்புக்கு முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தனது எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் டுவிட்டர் பதிவொன்றை வெளியிட்டு இதனை தெரிவித்துள்ளார்.

அவரின் டுவிட்டர் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

ஓய்வூதியதின் மீது வரி விதிப்பது நியாயமற்றது. இதனால் சமூக பாகுபாடு அதிகரிக்கும். தனியார் துறையினர் தம் பிள்ளைகளின் கல்வி,திருமணம்,வீட்டுப் புனரமைப்புகளை இந்த சேமிப்பைக் கொண்டே மேற்கொள்கின்றனர். செல்வந்தர்களின் வியாபாரங்களை தவிர்த்து ஏழைகள் மீது வரி விதிப்பதை நிறுத்தவேண்டும் என்ற சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

## ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ் பிணையில் விடுவிப்பு

கொழும்பு, பெப். 10

சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹை பிணையில் விடுவிக்க புத்தளம் மேல் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு சுமார் 21 மாதங்களாக சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில், அவர் சார்பில் முன்னதாக புத்தளம் மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட பிணைக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து, குறித்த உத்தரவை திருத்த கோரி, பிரதிவாதி சார்பில் மேன்முறையீட்டு நீதிமன்றில் சீராய்வு மனு தாக்கல் செய்யப்பட்டது.

இதனை கடந்த 7ஆம் திகதி பரிசீலனைக்கு எடுத்துக் கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்றின் நீதியரசர்களான மேனகா விஜேசுந்தர, நீல் இத்தவல ஆகியோரடங்கிய நீதியரசர்கள் ஆயம், சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ்வை பிணையில் விடுவிக்குமாறு புத்தளம் மேல் நீதிமன்றுக்கு உத்தரவிட்டது.

அதன்படி, புத்தளம் மேல் நீதிமன்றின் உத்தரவுக்கமைய, நேற்று அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார். (அ)

## பொகவந்தலாவை தீயால் 15 ஏக்கர் புல்காடு நாசம்!

நுவரெலியா, பெப்.10

நுவரெலியா, பொகவந்தலாவை மற்றும் காசல்ரீ பகுதிகளில், நேற்று முன்தினம் மாலை ஏற்பட்ட காட்டுத் தீ காரணமாக, சுமார் 15 ஏக்கர் மாணா புல் காடு எரிந்து நாசமானது.

ஹற்றன் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட காசல்ரீ நீர்த்தேக்க கரையோரத்தை ஒட்டியதான வனராஜா பகுதியில் ஏற்பட்ட தீ காரணமாக, குடிநீர் விநியோக குழாய்கள் எரிந்து நாசமாகியதால் வனராஜா பகுதி குடியிருப்பாளர்கள் குடிநீரின்றி பாதிப்படைந்துள்ளனர்.

இதேவேளை, பொகவந்தலாவை பிரதேசத்தில் ஏற்பட்ட தீ பரவலால் பல ஏக்கர் காடு எரிந்துள்ளது.

மலையகத்தில் தொடரும் வறட்சியான காலநிலையில் காடுகளுக்கு தீ வைக்கும் செயல் பாடுகள் அதிகரித்துள்ளன. இதன் காரணமாக நீரேந்தும் பகுதிகளில் நீர் வற்றிவருகின்றது.

மேலும் காசல்ரீ, நோட்டன் மேல்கொத்மலை கெனியன் நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்துள்ளது.

## முசலியில் மரக்கன்று நடுகை!



மன்னார், பெப். 10

'இலங்கையின் இயற்கைச் சூழலை பாதுகாப்பதற்கான படிக்கல்' எனும் கருப்பொருளில் மன்னார் கரித்தாஸ்-வாழ்வுதயம் நிறுவனத்தின் அமுலாக்கத்தில் மிசறியோ அமைப்பின் நிதி உதவியுடன் மன்னார் முசலி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள வேப்பங்குளம் கிராமத்தில் நூறு மரக்கன்றுகள் நடும் நிகழ்வு இடம்பெற்றது.

மன்னார் கரித்தாஸ் - வாழ்வுதயம் நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர் ச.ஜேசுதாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் விருந்தினர்களாக மன்னார் கரித்தாஸ் - வாழ்வுதயம் இயக்குநர் அருட்தந்தை எஸ்.அன்ரன் அடிகளார் மற்றும் வேப்பங்குளம் பள்ளிவாசல் மௌளவி எம்.நதீர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது வேப்பங்குளம் கிராமத்தின் சூழல் பாதுகாப்புக் குழு, இளையோர் சூழல் பாதுகாப்புக் குழு, சிறுவர் சூழல் பாதுகாப்பு குழு ஆகிய குழுக்களின் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். (அ)

ஈழநாடு
Eelanadu
10.02.2021 வியாழக்கிழமை
பிலவ வருடம், தை 28

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# அவர்கள் சொல்வதும் இவர்கள் சொல்வதும்?

இலங்கை வெளிநாட்டு அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் - இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்பிரமணியம் ஜெயசங்கர் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு தொடர்பில், இரண்டு அமைச்சுக்களும் அறிக்கைகளை வெளியிட்டிருக்கின்றன. இலங்கை வெளிநாட்டு அமைச்சின் அறிக்கையில் தமிழர் பிரச்னை தொடர்பில் எந்தவொரு கருத்தும் முன்வைக்கப்படவில்லை. வழமைபோல் இரு நாடுகளுக்கு இடையிலான உறவு தொடர்பில் மட்டுமே பேசப்பட்டிருக்கின்றது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது முதலாவது பயணமாக இந்தியாவிற்கு சென்றதன் பின்னர் வெளிப்படுத்திய கருத்துக்களிலும் தமிழர் பிரச்னை தொடர்பில் எந்தவொரு கருத்தையும் தெரிவிக்கவில்லை.

இந்தியாவுக்கான தூதுவர் மிலிந்த மொறகொடவின் கருத்துக்களிலும் இந்த விடயம் கவனமாகவே தவிர்க்கப்பட்டு வருகின்றது. அதாவது, யுத்தம் முடிந்ததற்கு பின்னர், தமிழர்களுக்கென்று தனித்துவமான பிரச்னைகள் இல்லை - அப்படியே இருந்தாலும் அது எங்களின் உள்நாட்டு விவகாரம் - அதனை நாங்கள் பார்த்துக் கொள்கின்றோம். இதற்குள் இந்தியா வரவேண்டியதில்லை.

இதுதான் தற்போதைய ஆட்சியாளர்களின் நிலைப்பாடு. ஆனால், மறுபுறத்தில் இந்தியா வழமைபோல் தமிழ் மக்கள் தொடர்பான தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருக்கின்றது. இலங்கை வெளிநாட்டு அமைச்சரோடு இடம்பெற்ற சந்திப்பு தொடர்பில், இந்திய வெளிவிவகார அமைச்சு வெளியிட்ட அறிக்கையில், ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்கள் சமத்துவத்துடனும் கௌரவத்துடனும் வாழ்வதற்கான நிலைமை உறுதிப்படுத்தப்படுவது இலங்கையின் நலன்களுக்கு நல்லது என்று குறிபிடப்பட்டிருக்கின்றது. - அதிகாரப் பகிர்வு இந்த முன்னெடுப்புக்கு முக்கியமானதென்றும் வலியுறுத்தப்பட்டிருக்கின்றது.

ஆறு தமிழ் கட்சிகள் இணைந்து இந்திய பிரதமருக்கு அனுப்பியிருக்கும் கடிதத்தில், இந்திய –இலங்கை ஒப்பந்தத்தின் குழந்தையான 13ஆவது திருத்தச்சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்படுவதற்கு இந்தியா உதவி செய்ய வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டிருக்கின்றது. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் மீளவும் இந்தியா தமிழ் மக்கள் தொடர்பில் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருக்கின்றது. ஆனால், இந்த விடயங்கள் வலியுறுத்தல்களுக்கு அப்பால் பயணிக்க வேண்டும்.

இதற்கு இந்தியா என்ன செய்யும் – செய்ய முடியுமென்பதற்கு அப்பால், தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் தலைவர்கள் என்போர் எவ்வாறு புத்திசாலித்தனமாக செயல்படப் போகின்றனர் என்பதுதான் முக்கியமானது. இன்றைய சூழலை பயன்படுத்தி உச்சபட்சமாக எதை செய்ய முடியுமோ – அதைச் செய்வது தொடர்பில்தான் தமிழர் தரப்புக்கள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.

வீதிகளில் நின்று 13 (மாகாண சபை) ஒழிக என்று கோஷம் எழுப்புவதால் எதனையும் சாதிக்க முடியாது. ஏனெனில், மாற்று வழிகள் எவையும் தமிழர்களுக்கு முன்னால் இல்லை. இன்றைய ராஜபக்ஷ ஆட்சியாளர்களும் - இது எங்களின் பிரச்னை - இதற்குள் இந்தியா தலையீடு செய்ய வேண்டியதில்லை என்றவாறு மறைமுகமாக கூறிவருகின்றபோது, தமிழ்த் தேசியம் பேசுவோரும் அதற்கு முண்டுகொடுக்கும் வகையில் இந்தியா தொடர்ந்தும் வலியுறுத்திவரும் - 13இற்கு எதிராக பேசுவதும், அதற்கு எதிராக வீதிகளில் திரள்வதும் யாரை பலப்படுத்தும்? யாருக்கு நன்மை செய்யும்? நிச்சயமாக தமிழ் மக்களுக்கில்லை.

# மறுதலிக்கப்படும் காணியுரிமை

து. நடராஜா

ஒரு சமூகத்தின் மேம்பாட்டிற்குக் காணியுரிமையும், வீட்டுரிமையும் வலுசேர்க்கின்றன. இவற்றின் சாத்தியப்பாடுகள் சமூகமானது தேசிய நீரோட்டத்தில் இணைந்து கொள்ளும் கனவிற்கும் உந்து சக்தியாக அமையும் என்பதையும் மறுப்பதற்கில்லை.இந்த வகையில் மலையக சமூகம் குறித்து நோக்குகையில், காணியுரிமையும், வீட்டுரிமையும் இல்லாத சமூகமாக இவர்களின் காலம் கழிந்து கொண்டிருக்கின்றது என்பது வருந்தத் தக்கதாகும்.

இது குறித்து முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் வெறும் கண்துடைப்பாக மட்டுமே இருந்து வருவதாக விசனங்கள் இருந்து வருகின்றன. இவ்விடயம் தொடர்பான அரசியல்வாதிகளின் அழுத்தங்கள் மேலும் அதிகரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளும் ஓங்கி ஒலிக்கின்றன. மலையக மக்களின் வரலாறு இவர்களின் உரிமைகளுக்கு உத்தரவாதம் தருவதாக இல்லை. இத்தகைய பல விடயங்கள் ஏனைய சமூகங்கள் முந்திச் செல்ல இடமளித்துள்ளதோடு, மலையக சமூகத்தின் பின்நிலைக்கும் வலுசேர்ப்பதாகவுள்ளது.

ஒரு சமூகம் தமது இருப்பினையும், அடையாளத்தையும் பாதுகாத்துக் கொள்வதன் ஊடாக சாதக விளைவுகள் பலவும் ஏற்படும். அரசியல் ஸ்திரப்பாடு, சமூக ஐக்கியம், உரிமைகளை பெற்றுக் கொள்வதில் அதிகரித்த அழுத்தம், மொழி மற்றும் கலாசார பாதுகாப்பு எனப்பலவும் இதில் உள்ளடங்கும். எனினும் ஒரு சமூகத்தின் இருப்பினைச் சிதைக்கின்றபோது அது பாதக விளைவுகள் பலவற்றுக்கும் வாய்ப்பளிக்கும் என்பதும் தெரிந்த விடயமாகும்.


இந்த வகையில் சமூகத்தின் இருப்பினைச் சிதைப்பதில் காணி சார்ந்த விடயங்கள் முக்கிய இடம் வகிக்கின்றன. மலையக மக்கள் இலங்கையில் பிரித்தானியர்களால் குடியேற்றப்பட்டபோது அவர்கள் யாரும் குடியேறாத பகுதிகளிலேயே குடியேற்றப் பட்டுள்ளனர் என்றும் பெருந்தோட்டங்கள் ஆரம்பிக்கப் பட்டதால் சிங்கள மக்களின் நிலப்பகுதி பாதிக்கப்பட்டது என்று கூறுவது ஆதார பூர்வமற்றது என்றும் புத்திஜீவிகள் சுட்டிக் காட்டியுள்ளனர். அத்தோடு மலையகத்தை தாயகமாகக் கொண்டு இம்மக்கள் வாழத் தொடங்கிய நிலையில் இம்மக்களின் இருப்பை சிதைப்பதிலும், படிப்படியாக அம்மக்களை தோட்டங்களில் இருந்தும் வெளியேற்றுவதிலும் இனவாதிகள் முனைந்து வருகின்றமை தொடர்பிலும் அவர்கள் கருத்துக்களை வெளிப்படுத்தத் தவறவில்லை.

அபிவிருத்தி என்ற பின்புலத்தை மையப்படுத்தி பெருந்தோட்டக் காணிகளை சுவீகரிக்கும் வழக்கம் அன்று ஆரம்பித்து இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. மூன்றாம் உலக நாடுகளில் உலக வங்கியின் வழிகாட்டலுடன் மேற்கொள்ளப்படும் ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்தி திட்டங்கள், வனவள மறுசீரமைப்பு முகாமைத்துவ திட்டங்கள், நகர நிர்மாணங்கள் மற்றும் சேரி ஒழிப்புத் திட்டங்கள் யாவும் சமூகத்தின் அடக்கப்பட்ட (தேசிய, மத,, வர்க்க, நிற ரீதியான அடக்குமுறைகள்) மக்கள் வாழும் பிரதேசங்களிலேயே மேற்கொள்ளப்படுகின்றன. இதன் மூலம் இம்மக்கள் தமக்கிருந்த இறுதி வாழ்விடப் பகுதியில் இருந்து அகற்றப்படுகின்றனர். இவ்வாறு வெளியேற்றப் படும் இம்மக்களின் சனச்செறிவு சிதறடிக்கப்பட்டு ஒரு சக்தியாக குறைந்தபட்சம் தம் உயிர் வாழ்வைக் கூட தக்கவைக்க முடியாத நிலைமைக்கு இவர்கள் தள்ளப் படுகின்றனர். அடக்கப் பட்ட மக்களை அப்புறப்படுத்தி அம்மக்கள் தொகுதிகளை அழித்தொழிப்பதானது புதிய அபிவிருத்தி முயற்சிகளுடன் திட்டமிட்ட வகையில் இணைத்து முன்னெடுக்கப்படுகின் றது என்ற ஒரு ஆழமான குற்றச்சாட்டும் காணிச் சுவீகரிப்பு தொடர்பில் முக்கியஸ்தர் களால் ஏற்கனவே முன்வைக்கப் பட்டுள்ள மையும் நோக்கத்தக்கதாகும்.

இதேவேளை நிலச்சீர்திருத்தம், தோட்டக் காணிகளை அரசு பொறுப்பேற்று பல்வேறு குடியேற்றத் திட்டங்களை ஏற்படுத்தியமை என்பவற்றின் மூலம் தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலை நடத்தப்பட்டு அவர்களின் காணியுரிமையும் வீட்டுரிமையும் பறிக்கப் பட்டதாக எழுத்தாளர் அ.லோறன்ஸ் தனது நூலொன்றில் சுட்டிக் காட்டியுள்ளார். மேலும் டெல்டா, சங்குவாரி லயன்கள் தாக்கப்பட்டு எரிக்கப்பட்டமை, டெவன் காணி சுவீகரிப்பில் சிவணு லெச்சுமணன் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி இறந்தமை போன்ற சம்பவங்கள் இனக்கலவரம், திட்டமிடப்பட்ட குடியேற்றங்கள் எல்லாம் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை என்பதனை புலப்படுத்துவதாகவும் லோரன்ஸ் குறிப்பிடுகின்றார்.

இந்நாட்டின் நிலமற்ற விவசாயிகளுக்கு காணிவழங்கும் நடவடிக்கை பாராட்டப்பட வேண்டியதே. எனினும் பெரும்பான்மை மக்களை மட்டுமே சார்ந்ததாகவுள்ளமை விரும்பத்தக்கதல்ல. சிங்கள மயமாக்கல் நடவடிக்கையை பிரதானமாகக் கொண்டு முன்னெடுக்கப்படும் இத்தகைய போக்குகள் விரும்பத்தகாத பின்விளைவுகளையே ஏற்படுத்துவதாக அமையும். இத்தகைய பல பிழையான முன்னெடுக்கப்புக்களால் இலங்கை பல பாடங்களைக் கற்றுக் கொண்டுள்ளது. எனினும் குப்புற விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை என்று கூறும் பாங்கிலான செயற்பாடுகள் நகைப்புக்கிடமாகியுள்ளன. இந்நிலையில் மலையக மக்களின் காணியுரிமைக் கனவை நனவாக்கி அவர்களின் வாழ்வில் புது இரத்தம் பாய்ச்சுவதற்கு ஆட்சியாளர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
மற்றவர்கள் பாராட்டும்படியான செயல்களை செய்வீர்கள். நீங்கள் நெகிழ்ச்சி அடையும்படியான நிகழ்ச்சி ஒன்று நடைபெறும். சுபநிகழ்ச்சிகளில் சந்தோஷமாக கலந்து கொள்வீர்கள்.

**இடபம்**
குறிக்கோள் ஒன்றை தீர்மானித்து அதை நோக்கி முன்னேறுவீர்கள். உங்களை ஆதரிக்க மாட்டார் என்று நினைத்தவரின் அன்பு கிடைக்கும். விலை உயரந்த பொருளை கவனமாக கையாளுங்கள்.

**மிதுனம்**
சொந்த பந்தங்களிடம் இருந்து அன்பளிப்பு கிடைக்கும். புதிய மின்னணு சாதனங்களை வாங்கி மகிழ்வீர்கள். உங்கள் மீது பிறர் கொள்ளும் பொறாமை சங்கடம் தரும்.

**கடகம்**
புதிய விஷயங்களைக் கற்பதில் ஆர்வம் பிறக்கும். உங்கள் பிரியத்துக்குரியவர் முன்னேற்றமான சூழ்நிலையை அடைவார். திட்டமிட்டு செய்த யுக்திகளால் எதிர்பார்த்த பலன் கிடைக்கும்.

**சிம்மம்**
தடைப்பட்ட பணி இன்று தொடரும். புதிய வழியில் வருமானம் வரும். பணியாளர்களுக்கு தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். அடிப்படை வசதிகளை பெருக்கிக் கொள்வீர்கள். பயம் தீரும்.

**கன்னி**
பழைய வாகனத்தை மாற்றி புதிய வாகனம் வாங்குவீர்கள். அதிகாரப் பதவியில் உள்ளோரிடம் இருந்து நல்ல செய்தி வரும். தேவையின்றி கடன் வாங்குவதைத் தவிர்க்கப்பாருங்கள்.

**துலாம்**
பிறரிடம் அளவாகப் பழகுங்கள். எதிர்பாராத நன்மை ஒன்று வரும். பணியிடத்தில் விட்டுக் கொடுத்து செல்ல வேண்டி வரும். நிதிநிலை சிறக்கும். செலவுக்கேற்ப வரவு வரும். நட்பால் நன்மை ஏற்படும்.

**விருட்சிகம்**
நண்பர்களுக்கு அதிக இடம் கொடுக்க வேண்டாம். உங்களுக்கு புரியாதிருந்த நுணுக்கங்கள் இன்று தெரிய வரும். உங்களின் உழைப்புக்கு அதிகப் பலன் கிடைத்து வியப்பீர்கள்.

**தனுசு**
சமீபத்தில் நட்பான நபர்களிடம் அதிக நெருக்கம் வேண்டாம். பொறாமைக்காரர்களால் ஏற்பட்ட தொல்லைகள் தீரும். லாபம் நிதானப்போக்கில் வரும். பேச்சில் கவனம் தேவை.

**மகரம்**
ஒப்பந்தம் ஒன்றின் மூலம் நன்மை அடைவீர்கள். பொருளாதார சிக்கலில் இருந்து விடுபட நடவடிக்கை எடுப்பீர்கள். நட்பு வட்டம் விரிவடையும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு.

**கும்பம்**
ஒப்பந்தம் ஒன்றின் மூலம் நன்மை அடைவீர்கள். பொருளாதார சிக்கலில் இருந்து விடுபட நடவடிக்கை எடுப்பீர்கள். நட்பு வட்டம் விரிவடையும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு.

**மீனம்**
இன்று பணியிடத்தில் கவனமாக செயல்படுவீர்கள். உடல் நலத்தில் அதிக அக்கறை காட்டுவீர்கள். நிம்மதி வரும். அலுவலக பணிகளை விரைந்து முடித்து பாராட்டு பெறுவீர்கள்.

# இராமேஸ்வரம் மீனவர்கள் வேலை நிறுத்தம்

இராமேஸ்வரம், பெப். 10

இலங்கை கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்ட தமிழக மீனவர்களின் படகுகள் மற்றும் கைதான மீனவர்களை விடுவிக்கக்கோரி இராமேஸ்வரம் மீனவர்கள் காலவரையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இராமேஸ்வரம் பகுதியிலிருந்து இரு தினங்களக்கு முன் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களை கைது செய்த இலங்கை கடற்படை, அவர்களின் படகுகளையும் கைப்பற்றியது, இதற்கு எதிர்ப்பு தெரிவித்து இராமேஸ்வரம் மற்றும் பாம்பன் மீனவர்கள் மத்திய மாநில அரசுகளிடம் கோரிக்கை வைத்து வந்தனர்.

படகுகளையும், மீனவர்களையும் விடுவிக்க தாமதமாய் வருவதை கருத்தில் கொண்டு இராமேஸ்வரம் மீனவர்கள் காலவரையற்ற வேலைநிறுத்தத்தில் நேற்று முதல் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் ஏறத்தாழ 820 படகுகளில் மீன்பிடி தொழில் செய்து வரும் ஆயிரத்துக்கு மேற்பட்ட மீனவர்கள், மீன்பிடி தொழில் சார்ந்த 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்களும் வாழ்வாதாரத்தை இழந்து உள்ளனர்.

மேலும் மீனவர்கள் கோரிக்கையை வலியுறுத்தி மத்திய மாநில அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் நாளை இராமேஸ்வரம் மற்றும் பாம்பன் ரயில் நிலையங்களில் ரயில் மறியல் போராட்டம் நடத்துவது எனவும் அறிவித்துள்ளனர்.



## அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் தேர்தலை எதிர்த்து வழக்கு

### பதில் மனு தாக்கல் செய்ய உத்தரவு

சென்னை, பெப். 10

அதிமுக ஒருங்கிணைப்பாளர் மற்றும் இணை ஒருங்கிணைப்பாளர் தேர்தலை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில் இரு தரப்பும் பதில்மனு தாக்கல் செய்ய உயர் நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

அதிமுகவில் நடந்த உள்கட்சி தேர்தலில் கட்சி ஒருங்கிணைப்பாளராக ஓ.பன்னீர்செல்வமும், இணை ஒருங்கிணைப்பாளராக கே.பழனிசாமியும் கடந்த டிசெய்பர் 6 அன்று ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர். இதை எதிர்த்து கட்சியில் இருந்து நீக்கப்பட்ட முன்னாள் எம்பி கே.சி.பழனிசாமி சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கை நிராகரிக்கக் கோரி அதிமுக சார்பிலும் வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்குகள் மீதான விசாரணை நேற்று நீதிபதி பி.வேல்முருகன் முன்பாக நடந்தது. அப்போது இதுதொடர்பாக இருதரப்பிலும் பதில்மனுக்கள் தாக்கல் செய்ய உத்தரவிட்ட நீதிபதி, இந்த வழக்கு விசாரணையை மார்ச் 8-க்கு ஒத்திவைத்துள்ளார்.

## பா.ஜ.கவுக்கு நல்லகாலம் தொடங்கிவிட்டது

### மாநில தலைவர் அண்ணாமலை

சென்னை, பெப். 10

“தமிழகத்தில் பா.ஜ.கவுக்கு நல்ல காலம் தொடங்கிவிட்டது” என்று, அக்கட்சியின் மாநில தலைவர் அண்ணாமலை தெரிவித்தார்.

நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலில் போட்டியிடும் பாஜக வேட்பாளர்களை ஆதரித்து திருச் செந்தூர் மற்றும் தூத்துக்குடியில் மாநிலத் தலைவர் அண்ணாமலை பிரச்சாரம் செய்தார்.

அப்போது அவர் பேசியபோது, “கடந்த 8 மாத திமுக ஆட்சியில் மக்களுக்கு 80 ஆண்டுகால சலிப்பு ஏற்பட்டுள்ளது. தமிழகத்தில் பா.ஜ.க. ஆட்சிக்கு வரமுடியாது என, ராகுல் காந்தி கூறியிருக்கிறார். 2014 இல் மோடி பிரதமராக முடியாது என்றார். 2019இல் மீண்டும் மோடிக்கு வாய்ப்பில்லை என்றார். ஆனால், அவர் சொன்னது பொய்த்தது.

அதுபோல தமிழகத்தில் பாஜக ஆட்சிக்குவர முடியாது என அவர் கூறிய மறுநாளே, உள்ளாட்சி தேர்தலில் பா.ஜ.க. வேட்பாளர்கள் போட்டியின்றி தேர்வாகியுள்ளனர். ராகுல் காந்தி கூறியதன் மூலம் தமிழகத்தில் பாஜகவுக்கு நல்ல காலம் தொடங்கிவிட்டது” என்று தெரிவித்தார்.

# ஆளுநருக்கு சொந்தக் கொள்கை இல்லை அமைச்சரவைக்கு அவர் கட்டுப்பட்டவர்

### முதல்வர் ஸ்டாலின் உரை

சென்னை, பெப். 10

‘தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளை மதித்து, தமிழ்நாட்டு மாணவர்களின் நலனை எண்ணி, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றத்திற்கு அரசியல் சட்டம் வழங்கியுள்ள அதிகாரத்தின்கீழ் மீண்டும் நிறைவேற்றி அனுப்பப்படும் இந்த நீட் விலக்கு சட்டமுன்வடிவினை தமிழ்நாடு ஆளுநர், இந்தியக் குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைக்க வேண்டும்’ என்று தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் சட்ட மன்றத்தில் ஆளுநருக்கு நேரடியாக கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட நீட் விலக்கு சட்ட மசோதாவை தமிழக ஆளுநர் ஆர். என்.ரவி தமிழக சபாநாயகருக்கு திருப்பி அனுப்பினார். இதையடுத்து மீண்டும் நீட் விலக்கு சட்ட மசோதாவை நிறைவேற்றுவதற்காக தமிழக சட்டமன்றத்தின் சிறப்பு கூட்டம் நேற்று முன்தினம் கூட்டப்பட்டது.

தமிழ்நாடு சட்டமன்றத்தில் பாரம்பரியமான பெருமைகளை இங்கு உரையாற்றிய போது குறிப்பிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின், “ஏதோ நீட் தேர்வுக்கு எதிராக விவாதிப்பதற்காக மட்டும் நாம் கூடவில்லை. நம்முடைய தமிழ்நாடு சட்டமன்றத்தின் இறையாண்மையை, உரிமைகளைக் காப்பாற்றுவதற்காகவும் கூடியிருக்கிறோம்.

தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளை மதித்து, தமிழ்நாட்டு மாணவர்களின் நலனை எண்ணி, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றத்திற்கு அரசியல் சட்டம் வழங்கியுள்ள அதிகாரத்தின்கீழ் மீண்டும் நிறைவேற்றி அனுப்பப்படும் இந்த “நீட்” விலக்கு சட்டமுன்வடிவினை காலம் தாழ்த்தாமல் குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைப்பார் என்று நான் நம்புகிறேன்” என்று தெரிவித்தார்.

# 12 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் இவ்வருடம் இலங்கை வருவார்கள்

## அரசு நம்பிக்கை

கொழும்பு, பெப். 10

**இலங்கை சுற்றுலாப் பயணத்தை மேற்கொள்வதற்குப் பாதுகாப்பான நாடாகும் என்று பல நாடுகளால் அடையாளம் காணப்பட்டுள்ளன என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.**

இதனால் இந்த வருடத்தில் 12 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதாக அமைச்சரவை இணைப் பேச்சாளர் வைத்தியர் ரமேஷ் பத்திரண ஊடகங்களிடம் தெரிவித்தார்.

எதிர்பார்த்த அளவில் சுற்றுலாப் பயணிகளின் வருகை இடம்பெற்று வருகின்றது எனவும் அவர் கூறினார்.

இதற்காக விசேட பிரசார நிகழ்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இலங்கை மக்கள் கொரோனா வைரஸ் தொற்றுக்கு மத்தியில் சுகாதார வழிகாட்டிகளை உரிய முறையில் கடைப்பிடித்து வாழ்ந்து வருகின்றனர் என்று வெளிநாட்டவர்கள் பலர் குறிப்பிட்டுள்ளனர். ஐரோப்பிய நாடுகளிலும் கொரோனாத் தொற்று நிலைமை மாறும் பட்சத்தில் மேலும் பல சுற்றுலாப் பயணிகள் இலங்கை வருவார்கள் எனவும் அமைச்சரவை இணைப்பேச்சாளர் சுட்டிக்காட்டினார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான இலங்கையின் பேச்சு குறித்து அமைச்சர் ரமேஷ் பத்திரண பதிலளிக்கையில், "இவ்வாறான சர்வதேச நிறுவனங்களுடனான பேச்சுகளுக்கான கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி, ஜப்பான், சீனா, இந்தியா நாடுகளுடன் தற்போதைய டொலர் நெருக்கடி குறித்து பேச்சு நடத்தப்படுகின்றது. எவ்வாறாயினும் 6.9 பில்லியன் கடனைத் திருப்பிச் செலுத்த அரசு உறுதியுடன் செயல்பட்டு வருகின்றது" - என்றார்.

கொரோனா வைரஸ் தடுப்பூசி தொடர்பான கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர், எதிர்காலத்தில் நோயை முற்றாக கட்டுப்படுத்திக்கொள்ள 3 ஆவது தடுப்பூசியை அனைவரும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

உலக நாடுகளில் ஒமிக்ரோன் வைரஸ் பரவி வருகின்றது. இதனால் தொற்றின் காரணமாக ஏற்படக்கூடிய சிக்கல் நிலையைத் தடுப்பதற்கு 2 தடுப்பூசிகளையும் பெற்றுக் கொள்வதுடன் 3 ஆவது தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதற்கும் கூடுதலான கவனம் செலுத்த வேண்டும் என்றும் பொதுமக்களை அமைச்சர் கேட்டுக் கொண்டார். (அ)



# கீரிமலை சிறாப்பர்மட புனரமைப்பின் இரண்டாம் கட்டப் பணிகள் ஆரம்பம்!

யாழ்ப்பாணம், பெப். 10

கீரிமலை சிறாப்பர் மடத்தின் மீள் புனரமைப்பிற்க்கான இரண்டாம் கட்டப் பணிகளுக்கு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை அடிக்கல் நாட்டப்பட்டது.

அண்மையில் சிறாப்பர் மடத்தின் முதலாம் கட்ட புனர் நிர்மாண பணிகளை சிறாப்பர் மட நிதியத்துடன் இணைந்து தொல்லியல் திணைக்களம் மேற்கொண்டிருந்தது.

இந்நிலையில் சிறாப்பரின் நான்காவது வாரிசான பொன்னா விக்னராஜாவின் நினைவுதினமான நேற்று முன்தினம் விஷேட பூஜை வழிபாடுகள் சிறாப்பர் மடத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்ட பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெற்றது.

தொடர்ந்து யுத்த காலத்தில் அழிக்கப்பட்ட சிறாப்பர் மடத்தின் தெற்கு பகுதி வாசல் மற்றும் அதனுடன் இணைந்த பகுதியை சிறாப்பர் நிதியத்தின் அனுசரணையுடன் தொல்லியல் திணைக்களம் இணைந்து மீள்புனரமைப்பு செய்வதற்கான அடிக்கல் நாட்டும் விழா ஆகம முறைப்படி இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் யாழ் மாவட்ட தொல்லியல் திணைக்கள அதிகாரிகளான பா.கபிலன், உஷாந்தி, தொல்லியல் திணைக்கள ஊழியர்கள், நகுலேஸ்வரர் ஆலய குருக்கள், பல்கலைக் கழக மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர். (அ)

# நெடுந்தீவு கடற்பரப்பில் கைதான 11 இந்திய மீனவர்களுக்கு மறியல்

யாழ்ப்பாணம், பெப். 10

நெடுந்தீவு கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்தனர் என்ற குற்றச்சாட்டில் கைதான இந்திய மீனவர்களை எதிர்வரும் 22ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிவான் ஜெ. கஜநிதிபாலன் உத்தரவிட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் அதிகாலை 3 படகுகளுடன் 11 இந்திய மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். நீரியல் வளத் திணைக்ளத்திடம் ஒப்படைக்கப்பட்ட இவர்களை அதிகாரிகள் நேற்று முன்தினம் மாலை நீதிமன்றில் முற்படுத்தினர்.

இதன்போதே, அவர்களை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கூட்டமைப்பு எம்.பிக்கள் இருவர் இந்திய பிரதி தூதருடன் சந்திப்பு

## இலங்கை மீனவர்களின் பிரச்னைக்கு தீர்வை பெற்றுத்தருமாறும் கோரிக்கை



கொழும்பு, பெப். 10

இலங்கைக்கான இந்தியாவின் பிரதித் தூதுவர் வினோத் ஜேக்கப்புக்கும், கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன் மற்றும் சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோருக்கிடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் மாலை, கொழும்பிலுள்ள இந்தியப் பிரதித் தூதுவரின் வதிவிடத்தில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின்போது, தமது வாழ்வாதாரம் சிதைக்கப்படுவதற்கும், மாதகல் மற்றும் வத்திராயன் பகுதியில் சடலங்களாக கரையொதுங்கிய மீனவர்களின் இறப்புக்கு நீதி கோரியும் வடமராட்சி, சுப்பர்மடம் பகுதியில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மீனவர்களின் நியாயமான கோரிக்கைக்கு கூர்நோக்குடனான நிரந்தரத் தீர்வைப் பெற்றுத் தருமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இரு தரப்பு மீனவர்களிடையேயும் தொடர்ச்சியாக நிலவி வரும் இம்முரண்பாடுகள் ஈழத்தமிழர்களுக்கும், தாய்த் தமிழக உறவுகளுக்குமிடையே விரிசலை ஏற்படுத்துவதைத் தவிர்க்கும் முகமாக, இலங்கை மீனவர்களின் கடல் எல்லைகளை வரையறை செய்வதற்கேனும் துரித நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென்ற வேண்டுகோள் இரு பாராளுமன்ற உறுப்பினர்களாலும் முன்வைக்கப்பட்டது.

ஈழத்தமிழர்களின் அரசியல் எதிர்காலம் குறித்தும், தமிழ் மக்களின் ஏகோபித்த அரசியல் அபிலாஷையான நிலையான அரசியற்தீர்வைப் பெறுவதில் ஏற்படுத்தப்படும் காலதாமதமானது, தமிழர்களின் நில உரித்துக்களை வன்பறிப்புச் செய்து, தமிழர்களின் இருப்பைக் கேள்விக்குட்படுத்தும் சமநேரத்தில் இந்தியாவின் அரசியல், இராஜதந்திர நகர்வுகளிலும் தாக்கம் செலுத்தக்கூடும் என்பதால், தமிழர்களுக்கான நிரந்தர அரசியல்தீர்வில் இந்தியாவின் வகிபாகம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பது குறித்தும் இதில் கலந்துரையாடப்பட்டது. (அ)

# இந்திய மீனவர் அத்துமீறல் ஒரு புதிய விடயமே அல்ல!

## அமைச்சரவை பேச்சாளர் கூறுகிறார்



கொழும்பு, பெப். 10

இந்திய மீனவர்களின் அத்துமீறல் சம்பவம் ஒரு புதிய விடயமல்ல. இவ்வாறான சம்வங்கள் இந்திய மற்றும் இலங்கைக்கிடையில் நீண்ட காலமாக இடம்பெற்று வரும் ஒரு நிகழ்வுவாகும் என்று அமைச்சரவை பேச்சாளரும், வெகுஜன ஊடக அமைச்சருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

உணர்ச்சி வசப்படும் மக்களை மேலும் சிரமத்திற்குள்ளாக்காது இது தொடர்பான விடயங்களை வெளியிடும் போது விசேடமாக தமிழ் ஊடகங்கள் மிகுந்த பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்திய மீனவர்களின் வள்ளங்களை இலங்கையில் ஏலம் விட இருப்பதாக வெளியான செய்தி தொடர்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கும் அமைச்சர் பதிலளிக்கையிலேயே இந்த விடயங்களை சுட்டிக்காட்டினார்.

இவ்வாறான மீனவர் அத்துமீறல் சம்பவங்களுக்கு தீர்வு காண்பதற்கான பேச்சு தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன. இலங்கை மற்றும் இந்தியாவுக்கிடையில் இராஜதந்திர மட்டத்தில் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்றும் அவர் கூறினார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ காலத்தில் பிடிக்கப்பட்ட 24 மீன்பிடி வள்ளங்கள் அந்நாட்டு அரசால் விடுவிக்கப்பட்டதை சுட்டிக் காட்டிய அமைச்சர், இரு நாடுகளுக்கிடையில் வரலாற்று ரீதியிலான நல்லுறவு ரீதியில் விடயங்கள் கையாளப்படுவதாகவும் குறிப்பிட்டார். (அ)

# எரிபொருள்களின் விலையை அதிகரிக்குமாறு பெற்றோலிய கூட்டுத்தாபனமும் கோருகின்றது

கொழும்பு, பெப். 10

எரிபொருள் விலையை அதிகரிக்குமாறு இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனமும் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு ஏற்படும் இழப்பை குறைக்கும் வகையில் எரிபொருள் விலையை அதிகரிப்பது இந்த தருணத்தில் அவசியமானது என அதன் தலைவர் சுமித் விஜேசிங்க, அரசுக்கு அறிவித்துள்ளார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சிபெற்கோ எரிபொருள்களின் விலையை அரசு திருத்தியமைக்கும் என நேற்று முன் தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த சுமித் விஜேசிங்க தெரிவித்தார்.

ஐ.ஓ.சி நிறுவனத்திடம் இருந்து எரிபொருளை கொள்வனவு செய்வதில் ஏற்பட்டுள்ள இழப்பு காரணமாக சிபெற்கோ பெற்றோல் நிலையங்களுக்கு வரும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரித்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

# அரச அனுமதி கிடைக்குமாயின் இந்திய பக்தர்களும் கச்சதீவுக்கு!

## யாழ். அரச அதிபர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், பெப். 10

**கச்சதீவு திருவிழாவுக்கு இந்திய பக்தர்கள் செல்வது தொடர்பான கோரிக்கைகளை நாங்கள் உரிய தரப்புகளுக்கு அனுப்பியிருக்கின்றோம். அங்கிருந்து அனுமதி கிடைக்கும் பட்சத்தில் இந்தியாவிலிருந்தும் பக்தர்கள் பங்கேற்க முடியும் என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.**

கச்சதீவு திருவிழா தொடர்பில் ஊடகவியாளர் கேள்வி எழுப்பியபோதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எதிர்வரும் மார்ச் மாதம் 11ஆம் 12ஆம் திகதிகளில் கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் நடைபெறவுள்ளது.

இதன் ஆரம்ப கட்ட கூட்டத்திலேயே சுகாதார நிலைமை மற்றும் கொரோனா நிலைமைகளை கருத்தில் எடுத்து சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகத்தின் ஆலோசனைக்கமைய 500 உள்ளூர் பக்தர்கள் செல்வதற்கு மாத்திரம் அனுமதி கிடைத்திருந்தது.

இருந்தபோதும் தற்போது ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை நாம் முன்னெடுத்து வருகின்றவேளையில் இந்திய பக்தர்களையும் கலந்து கொள்ள அனுமதிக்கவேண்டும் என்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இந்த கோரிக்கைகளை நாங்கள் உரிய தரப்புகளுக்கு அனுப்பியிருக்கின்றோம். அங்கிருந்து அனுமதி கிடைக்கும் பட்சத்தில் இந்தியாவிலிருந்தும் பக்தர்கள் பங்கேற்க முடியும்.



இவ்வாறான கோரிக்கை குறித்து சுகாதார அமைச்சு மற்றும் கலாசார அமைச்சுக்கு அறிவித்திருக்கின்றோம். அனுமதி கிடைக்கும் பட்சத்தில் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க முடியும். இந்த விடயத்தில் சில முன்னெடுப்புக்கள் எடுக்கப்படுவதாக அறிய முடிகின்றது-என்றார். (அ)

# தபால் நிலையங்கள் மூடப்படும் அபாயம்

## ஊழியர்கள் பற்றாக்குறை காரணமாக

கொழும்பு, பெப். 10

தபால் துறையில் ஊழியர்கள் பற்றாக்குறையால் ஏராளமான தபால் நிலையங்கள் மூடப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

சுமார் 6,000 ஆக இருந்திருக்க வேண்டிய மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை இன்று சுமார் 4,000 ஆக உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

2018ஆம் ஆண்டு முதல் பணியாளர்களை இணைத்துக் கொள்ள அனுமதி கோரப்பட்ட போதிலும், இதுவரை அரசாங்கத்தின் அனுமதி கிடைக்கவில்லை.

பற்றாக்குறைக்கு தற்காலிக தீர்வாக ஓய்வுபெற்ற 500 தபால் உத்தியோகத்தர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமிக்க முன்வந்த போதிலும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை என தபால் ஊழியர்கள் தெரிவிக்கின்றனர்.

பொரளை தபால் நிலையத்தில் 35 பணியாளர்கள் இருக்க வேண்டிய நிலையில் தற்போது 7 பணியாளர்களே இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

சில தபால் நிலையங்களில் பணிபுரியும் அதிகாரி ஒருவர் மகப்பேறு விடுப்பில் சென்றால் அலுவலகத்தை மூடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. (அ)

# கம்பஹாவில் கத்திக்குத்துக்கு இலக்காகி ஒருவர் உயிரிழப்பு!

கொழும்பு, பெப். 10

கம்பஹா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட லக்ஷ்மி வீதிப் பகுதியில் வீடொன்றில் ஏற்பட்ட தகராறில் நபர் ஒருவர் கத்திக்குத்துக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

நேற்று முன் தினம் காலை லக்ஷ்மிபர பகுதியில் உள்ள வீடொன்றுக்கு மோட்டார் சைக்கிளில் வந்த இருவர், அங்கிருந்தவர் மற்றும் இருவருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

வாக்குவாதம் முற்றியதை அடுத்து மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் கூரிய ஆயுதத்தால் தாக்கியதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

காயமடைந்த மூவரும் கம்பஹா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஏனைய இருவரும் கம்பஹா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் கம்பஹா லக்ஷ்மி வீதியைச் சேர்ந்த 62 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கம்பஹா பகுதியைச் சேர்ந்த 35 மற்றும் 32 வயதுடைய சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டு கம்பஹா நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர். (அ)

# பாணந்துறை துப்பாக்கி சூடு; பிரதான சந்தேக நபர் கைது!

கொழும்பு, பெப். 10

பாணந்துறை, கேதுமதி மகளிர் வைத்தியசாலையில் அம்பியூலன்ஸ் சாரதி மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட பிரதான சந்தேக நபர் நேற்று முன் தினம் இரவு கைது செய்யப்பட்டார் என பாணந்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்தனர்.

பாணந்துறை குருப்புமுல்ல பகுதியைச் சேர்ந்த 31 வயதுடையவரே கைதானார்.

சந்தேக நபர் ஹெரோயின் போதைப்பொருளுடன் முன்னர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவ தினத்தன்று சந்தேக நபர் மோட்டார் சைக்கிளின் பின்னால் அமர்ந்து அம்புலன்ஸ் சாரதியை சுட முயற்சித்துள்ளமை விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.



அதற்கமைய, சம்பவம் தொடர்பில் சந்தேக நபர்கள் 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)



# மாத்தறையில் பெண் ஒருவர் சடலமாக மீட்பு!

கொழும்பு, பெப். 10

மாத்தறை - தொட்டமுன பகுதியில் நேற்று முன் தினம் இனந்தெரியாத பெண்ணொருவரின் சடலத்தை பொலிஸார் மீட்டுள்ளனர்.

சடலமாக மீட்கப்பட்ட பெண் 55 வயது மதிக்கத்தக்கவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், சடலம் மாத்தறை பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (அ)

## யாழ்.போதனா வைத்தியசாலையில்

# வெளிநாடு செல்பவர்களுக்கான பி.சி.ஆர் சோதனைகள் நிறுத்தம்!

யாழ்ப்பாணம், பெப். 10

வெளிநாடு செல்பவர்களுக்கான பி.சி.ஆர் பரிசோதனைகள் நாளை முதல் இடைநிறுத்தப்படுவதாக யாழ்.போதனா வைத்தியசாலை நிர்வாகம் அறிவித்துள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர் கே.நந்தகுமாரன் குறித்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

நடைபெற்றுவரும் தாதியர் மற்றும் நிறைவுகாண் தொழில் நுட்பவியலாளர்களின் தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக மறு அறிவித்தல் வரை தற்காலிகமாக அது நிறுத்தப்பட்டுள்ளது என்று அவர் அறிவித்துள்ளார். (அ-03)

# பயங்கரவாதத்தை முறியடிக்க இலங்கைக்கு ஜப்பான் உதவி

கொழும்பு, பெப். 10

போதைப்பொருள் மற்றும் பயங்கரவாத செயற்பாடுகளை முறியடிப்பதற்காக ஜப்பானிடமிருந்து வாகனங்களும் உபகரணங்களும் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

ஜப்பான் அரசாங்கத்திடமிருந்து கிடைக்கும் இரண்டாம் கட்ட அன்பளிப்பாக இவை கிடைத்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அலுவலக வளாகத்தில் வைத்து, ஜப்பான் தூதுவர் மிசூகொஷி ஹிடெயாக்கி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் அவற்றை நேற்று முன்தினம் முற்பகல் வழங்கினார்.

28 லாண்ட் குரூசர் ரக வாகனங்களும் பிராடோ ரக வாகனமொன்றும் போதைப்பொருள் மற்றும் வெடிபொருட்களை கண்டறிவதற்கான ஸ்கானர் இயந்திரங்களும் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டன.

சுமார் 700 மில்லியன் ரூபா பெறுமதியான உபகரணங்களே வழங்கிவைக்கப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபர் விக்ரமரத்னவும் அரச பகுப்பாய்வாளர் கௌரி ரமணாவும் வாகனங்களை பொறுப்பேற்றுக்கொண்டனர். (அ)



# யாழ். மீனவர் போராட்டத்துக்குள் புகுந்து குழப்பம் செய்ய சில குள்ளநரிகள் முயற்சி

## அமைச்சர் டக்ளஸ் குற்றச்சாட்டு



கொழும்பு, பெப். 10

**நீதிக்காக போராடிய கடற்றொழிலாளர்களுக்கு இடையே ஒட்டகங்களும், குள்ளநரிகளும் நுழைந்து குழப்பம் விளைவிக்க முயன்றன.**

எனினும் அது முடிய வில்லை. நீதியின் குரலாக நிமிர்ந்த எங்கள் கடற்றொழி லாளர்களின் தீர்வு நோக்கிய பயணத்தை திசை திருப்ப முயன்றவர்கள் தோற்றுப் போனார்கள் என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இந்தியக் கடற்றொழிலாளர் கள் விவகாரத்தில் ஏனையோர் போன்று பொறுப்பற்ற முறை யில் ஏனோதானோ என்று தன் னால் கதையளக்க முடியாது எனவும் கூறிய அவர், குழம்பிய குட்டையில் மீன் பிடிக்காமல் நான்கு திட்டங்களை முன் வைத்து உறுதியுடன் செயலாற்றி வருவதாகவும் அவர் கூறினார்.

இந்தியக் கடற்றொழிலாளர் களின் அத்துமீறிய எல்லை தாண்டிய சட்ட விரோதத் தொழில்முறைக்கு எதிராக நாடளாவிய ரீதியில் கடற் றொழிலாளர்கள் மேற்கொண்டு வருகின்ற போராட்டங்கள் தொடர்பாக நேற்று பாராளு மன்றில் விசேட அறிக்கையை சமர்ப்பித்து உரையாற்றும் போதே கடற்றொழில் அமைச் சர் மேற்கண்டவாறு கூறினார்.

கடந்த 27 ஆம் திகதி பருத் தித்துறை வத்தராயனில் இருந்து கடல் தொழிலுக்கு சென்ற நிலையில் உயிரிழந்த இரண்டு கடற்றொழிலாளர் களுக்கும் பாராளுமன்றில் அவர் அஞ்சலி செலுத்தினார்.

அவர் தனது உரையில்- எமது கடல் எல்லை - வளங் கள் யாவும் எமது மக்களுக்கே சொந்தம். கடல் எல்லைத் தாண்டி வந்து அத்துமீறுகின்ற செயல் இன்று நேற்றுள்ள பிரச்னை அல்ல. அது, நீண்ட கால பிரச்னையாகும்.

இதற்கு முடிவு கட்டிட நான் எடுத்து வருகின்ற முயற்சிகள் யாவும், வெறும் சுயலாப அர சியல் நோக்குடையவை அல்ல. இது என் உதிரத்திலும், உணர் விலும் ஒன்று கலந்துவிட்ட பிரச்னைகளில் ஒன்றாகும்.

நான் கடற்றொழில் அமைச் சராக பதவியேற்பதற்கு முன்ன ரும் நேரில் சென்று, களத்தில் நின்று எமது கடற்றொழிலா ளர்களின் விவகாரங்களை சரி வரக் கையாண்டிருக்கின்றேன்.

கச்சதீவில் இரு தரப்பு கடற்றொழிலாளர்களையும் வைத்து, பல கலந்துரையாடல் களை மேற்கொண்டிருக்கிறேன்.

அதுமட்டுமன்றி, இந்திய மத்திய, மாநில தலைவர்கள் மற்றும் துறைசார் நிபுணர்களு டனும் கலந்துரையாடி வரு கின்றேன். ஆகவே, இது என் கடமை மட்டுமல்ல, என் உள் ளார்ந்த உணர்வும் கூட. இந்தப் பிரச்னையில் இரு நாடுகளும் தொடர்புபடுவதால், இராஜ தந்திர முறையிலான முன்னெ டுப்புகள் ஒருபுறம் மேற்கொள் ளப்பட்டு வருகின்றன.

அடுத்ததாக, இழுவை வலைப் படகுகளின் மூலமான தொழில் முறை என்பது இரு நாட்டு கடல் வளங்களைச் சுரண்டுவதுடன், மீனின இனப் பெருக்கமும் அழிவுற்று வரு கின்றன.

அதேநேரம், எமது கடற் றொழிலாளர்களின் தொழில் உபகரணங்கள், படகுகள் என்பனவும் பாதிக்கப்பட்டு, அழிவடைகின்றன.

இவற்றைத் தவிர்க்க நான் நான்கு திட்டங்களை முன் வைத்துள்ளேன்.

இது தொடர்பில் இரு நாட்டு கடற்றொழிலாளர்களுக் கிடையில் விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் செயற்பாடுகளை முன்னெடுத்தல்.

அடுத்ததாக, எல்லைத் தாண்டி வருகின்ற இழுவை வலைப் படகுகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை வினைத் திறனுடன் முன்னெடுத்தல்.

அடுத்து, இவ்வாறு சட்ட நடவடிக்கைகளின் ஊடாக அரசுடமையாக்கப்படுகின்ற படகுகளை, அவற்றின் இழுவை வலை மடிகளை அகற்றி, எமது கடற்றொழிலாளர்களுக்கு நீதி மன்றத்தின் ஊடாகப் பெற்றுக் கொடுத்தல்.

இராட்சத படகுகளை எதிர் கொண்டு, சிறிய படகுகளில் தொழில் செய்ய இயலாத எமது கடற்றொழிலாளர்க ளுக்கு இது தன்னம்பிக்கையை ஏற்படுத்துவதாகவும், அவர் களது வாழ்வாதாரங்களை உயர்த்துவதாகவும் அமையும்.

இந்த திட்டங்களே நான் வகுத்திருக்கும் திட்டங்களாகும்.

நீதியான தீர்வு நோக்கிய எமது கடற்றொழிலாளர்களின் குரல் வளைகளை நெரிப்பது போல், நீதியின் கூடாரத்தினுள் ஒட்டகங்களும், குள்ள நரிக ளும் நுழைந்தன. ஆனாலும், நீதியின் குரலாக நிமிர்ந்த எங்கள் கடற்றொழிலாளர் களின் தீர்வு நோக்கிய பய ணத்தை திசை திருப்ப முயன்ற வர்கள் தோற்றுப் போனார்கள்.

இதற்கு முன்னர் உள்ளூர் இழுவை வலைப் படகுகளி லிருந்து கடற்றொழில் அமைச் சர் ஒரு இரவுக்கு ஒரு படகி லிருந்த 5000 ரூபா வீதம் பெறு வதாக பாராளுமன்ற உறுப்பி னர் சுமந்திரன் 22.10.2021 பாராளுமன்றத்தில் தெரிவித் திருந்தார்.

பாராளுமன்ற சிறப்புரிமை களைப் பயன்படுத்தியே அவர் இந்த அப்பட்டமான பொய் யான தகவலைத் தெரிவித்திருந் தார். அவரது அக் கூற்றில் உண்மை இருப்பதாக அவர் கரு தினால், நீதிமன்றத்தின் ஊடாக அதை அவர் நிரூபிக்க வேண்டும்.

பாராளுமன்றத்திற்கு வெளி யில் அவர் இக்கருத்தினை வெளியிட்டிருந்தால், நான் அது தொடர்பில் சட்ட நட வடிக்கை எடுப்பேன் என்ப தையும் அவர் அறிவார்.

ஏற்கனவே இத்தகைய போலி யான கருத்துகள் தொடர்பில் நான் சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதும், அவற் றில் நான் வெற்றிகண்டதும் அவர் அறியாமல் இல்லை.

எனவே, அவர் இக்கூற்றினை நிரூபிக்க முன்வர வேண்டும் என்பதையும் கேட்டுக் கொள் கின்றேன் -என்றார். (அ)

## 58 இலட்சம் பேர் பூஸ்டர் பெற்றனர்

கொழும்பு, பெப். 10

நாட்டில் பூஸ்டர் தடுப்பூசி களை பெற்றுக்கொண்டோரின் எண்ணிக்கை 58 இலட்சத்தை கடந்துள்ளது.

அதனடிப்படையில், இது வரை 58 இலட்சத்து 41 ஆயி ரத்து 518 பேருக்கு பூஸ்டர் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய் ஆய்வுப்பிரிவு தெரிவித் துள்ளது. தடுப்பூசி ஏற்றும் செயற்றிட்டத்தின் கீழ் இது வரை நாட்டில் ஒரு கோடியே 40 இலட்சத்து 21 ஆயிரத்து 430 பேருக்கு 02 தடுப்பூசிகளும் ஏற்றப்பட்டுள் ளன.

ஒரு கோடியே 67 இலட் சத்து 94 ஆயிரத்து 917 பேருக்கு இதுவரை முதலாவது தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது. (அ)

## வேம்பிராய் சந்தியில் விபத்து; சிறுமி உட்பட மூவர் படுகாயம்

கொடிகாமம்-வேம்பிராய் சந்திப் பகுதியில் நேற்று முன் தினம் மாலை 6 மணியளவில் இடம்பெற்ற மோட்டார் சைக் கிள் விபத்தில் சிறுமி உட்பட மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

புத்தூர் வீதி ஊடாக பய ணித்த இரண்டு மோட்டார் சைக்கிள்களில் ஒன்று மீசாலை-வேம்பிராய் பகுதியில் கிளை வீதி ஒன்றினுள் திருப்ப முற் பட்டவேளையில் பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதி இந்த விபத்து நேர்ந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

விபத்தில் மந்துவில் மேற்கு பகுதியைச் சேர்ந்த 8 வயதுச் சிறுமி கால் முறிந்த நிலையி லும், 37வயதான அவரது தாய் தலையில் படுகாயமடைந்த நிலையிலும், மீசாலை வடக் கைச் சேர்ந்த 17 வயது இளை ஞன் காலில் காயமடைந்த நிலையிலும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டனர். மூவரும் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட் டனர். (அ)

# மாகாண சபைத் தேர்தல் விரைவில் நடைபெறும்

## மஸ்தான் எம்.பி. தெரிவிப்பு

வவுனியா, பெப். 10

விரைவில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான ஏற் பாடுகள் இடம்பெற்று தேர்த லும் இடம்பெறும் என வன்னி பாராளுமன்ற உறுப்பினர் கே. மஸ்தான் தெரிவித்தார்.

வவுனியாவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட பின்னர் புதிய அரசமைப்பில் மாகாண சபை முறைமை நீக்கப் படும் என தெரிவிக்கப்படுவது குறித்து ஊடகவியலாளர்கள் கேட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

ஒவ்வொருவரும் தற்போது தாங்கள் நினைத்ததை கூறு கின்றனர். 13ஆவது திருத்தம் இல்லாமல் ஆக்கப்படும் என்று இல்லை. இவ்வாறான நிலைப்பாடு எடுக்கப்படும் என எமது தரப்பாலும் இதுவரை



எமக்கு கூறப்படவும் இல்லை.

ஒரு சமூகத்துக்கான தீர்வாக மாகாண சபைகள் இருக்கும் போது அதனை இல்லாமல் ஆக்குவார்கள் என்பதெல்லாம் தேர்தல் காலத்தில் சொல்லப் படுவதுபோல பிழையான கருத் துகள். உண்மையில் மாகாண சபைத் தேர்தலை வைக்க முடி யாத சூழலை ஏற்படுத்தியதே கடந்த அரசாங்கம்தான்.

எனினும், விரைவாக அதற்குரிய முடிவுகள் எடுக்கப் பட்டு மாகாணசபை தேர்தலும் விரைவில் நடைபெறும்-என் றார். (அ)

# 12 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களுக்கு தடுப்பூசி செலுத்தும் சாத்தியக்கூறுகள் குறித்து ஆராய்வு

கொழும்பு, பெப். 10

12 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களுக்கு தடுப்பூசி செலுத்துவதற்கான சாத்தி யக்கூறுகள் குறித்து ஆய்வு நடத்தி வருவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த விடயம் குறித்து ஊடகமொன்றுக்கு தெரிவித் துள்ள சுகாதார சேவைகள் பிர திப் பணிப்பாளர் நாயகம் வைத் தியர் ஜி.விஜேசூரிய, நிபுணர் குழுவின் சமர்ப்பிப்புகளுக்குப் பின்னர் இது குறித்து எதிர்கால நடவடிக்கை எடுக்கப்படும்.

இலங்கையில் தற்போது பரவியுள்ள கொரோனா வைரஸ் மற்றும் அது குழந்தை களை எவ்வாறு பாதிக்கலாம் என்பதன் அடிப்படையில் 12 வயதிற்கு உட்பட்ட சிறுவர் களுக்கு தடுப்பூசி செலுத்துவது குறித்து பரிசீலிக்கப்படுகிறது-என்றார். (அ)

# கம்மன்பிலவின் கருத்து குறித்து திஸ்ஸ குட்டியாராச்சி விசனம்

கொழும்பு, பெப். 10

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு கொரோனா தொற்று மட்டும் கார ணமல்ல என அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்த கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

ஆளும் கட்சி பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி முன்னிலையில் தானும் பின்வரிசை பாராளுமன்ற உறுப்பினர்களும் இதனைத் தெரிவித்ததாக அவர் கூறினார்.

மின் உற்பத்திக்கான எரி பொருளை வழங்குவது சாத்திய மில்லை என எரிசக்தி அமைச்சர் ஒருவர் கூறவேண்டிய அவசிய மில்லை எனவும், அதற்கு உரிய அமைச்சர்களே பொறுப்பு கூற வேண் டும் எனவும் அவர் கூறினார். (அ)





# தமிழர் பகுதிகளுக்குச் செல்ல ஆர்வம் காட்டும் அனைத்துலக பிரதிநிதிகள்

**வேல்ஸிலிருந்து அருஸ்**

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் இந்த மாதத்தின் இறுதியில் ஆரம்பமாகவுள்ள நிலையில், ஐ.நாவிற்கான இலங்கைப் பிரதிநிதி ஹனா சிங்கர் வடக்கிற்குப் பயணம் மேற்கொண்டு, தமிழர் தரப்பின் கருத்துகளை அறிய முற்பட்டுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பில் நீதியான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும், காணாமல் போனவர்கள் விவகாரம் தொடர்பில் நீதியான விசாரணைகள் மேற்கொள்ளப் பட்டு, நீதி வழங்கப் பட வேண்டும் என மேற்குலக நாடுகளும், ஐக்கிய நாடுகள் சபை உள்ளிட்ட மனித உரிமை அமைப்புகளும் தொடர்ந்து குரல் கொடுத்து வருகின்ற போதும், அவர்கள் அதனை செயல் படுத்துவதில் பின்னிற்பது என்பது எமக்கு தெளிவாகத் தெரிந்த ஒன்று. எனவே அந்த தடைக்கற்களைக் கண்டறிந்து, அகற்ற வேண்டியது எமது முதன்மையான கடமையாகின்றது.

ஐ.நா மனித உரிமைகள் பேரவை கடந்த 12 ஆண்டுகளில் 7 தீர்மானங்களை நிறைவேற்றிய போதும், பெறுப்புக்கூறல், அனைத்துலக மனித உரிமை விதிகளை நிலைநாட்டுதல் மற்றும் இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு ஒன்றைக் காணுதல் போன்ற விடயங்கள் தொடர்பில் அன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்க்ஷ, போர் நிறைவடைந்த பின்னர் ஐ.நா செயலாளர் நாயகத்திற்கு உறுதிமொழிகளை வழங்கியபோதும், இதுவரை இலங்கை அரசு எந்தவிதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. எனவே மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் இது தொடர்பில் உறுப்பு நாடுகள் பேச வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் வெளிநாட்டுத் தூதுவர்களுக்கும், உறுப்பு நாடுகளுக்கும் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

**மக்களை பாதுகாக்கவா? நாடுகளை காப்பதற்கா?**

தம்மை ஐ.நா காப்பாற்றும் எனத் தமிழ் மக்கள் நம்பியிருந்தனர். ஆனால் இரண்டாம் உலகப் போருக்கு பின்னர் உருவாக்கப்பட்ட ஐ.நா அமைப்பு என்பது நாடுகளை காப்பாற்ற உருவாக்கப் பட்டதல்ல, மக்களைக் காப்பாற்றவே உருவாக்கப்பட்டது என்பதை ஐ.நா மறந்துவிட்டது. அதனால் தான் 1,50,000 இற்கு மேற்பட்டவர்கள் உயிரிழந்தும், காணாமலும் போயுள்ளனர். வருங்காலத்திலாவது ஐ.நா தனது தவறுகளை உணர்ந்து செயற்பட வேண்டும் என ஹனா சிங்கரிடம் யாழ். மாநகர முதல்வர் மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

ஆர்வம் காட்டும் அனைத்துலகப் பிரதிநிதிகள் தென்னிலங்கை அரசின் செயற்பாடுகள் மற்றும் மனித உரிமை விடயங்கள் தொடர்பில் வதிவிடப் பிரதிநிதிக்கு தெரியப் படுத்தியுள்ளோம். கடந்த கூட்டத் தொடரில் வெளியிடப் பட்ட அறிக்கை தொடர்பாக எமது விமர்சனங்களைத் தெரிவித்த போது, புதிய அரசுக்கு அவகாசம் வழங்கவே அவ்வாறு அறிக்கை வெளியிட்டதாகவும், இந்த தடவை காத்திரமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என ஹானா தெரிவித்ததாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

போர் நிறைவடைந்த பின்னர் வெளியிடப்பட்ட ஐ.நாவின் தீர்மானம் என்பது இலங்கை அரசை புகழ்வதாகவே இருந்தது. ஆனால் அதன் பின்னர் கொண்டுரப்பட்ட தீர்மானங்களில் இலங்கை மீதான அழுத்தங்கள் அதிகரித்துச் சென்றதை நாம் காணமுடிகின்றது. இறுதியாக கொண்டு வரப்பட்ட 46/1 தீர்மானத்தில் அரசியல் விடயங்களும் புகுத்தப்பட்டது என்பது, பூகோள அரசியல் நகர்வுகளின் எதிரொலியாகவே இதனை நாம் பார்க்க முடியும்.

**ஐ.நாவின் செயற்பாடுகளில் தாக்கத்தை எற்படத்துமா?**

அதாவது தமிழ் மக்களின் அரசியல் நகர்வுகளும், ஐ.நாவின் நடவடிக்கைகளில் தாக்கத்தை உண்டுபண்ணும் என்பதே அதன் பொருள். மனித உரிமைகள் ஆணைக் குழுவின் கூட்டத் தொடருக்கு முன்னர், ஐ.நா வதிவிடப் பிரதிநிதி தமிழ் கட்சிகளின் தலைவர்களைச் சந்திக்க விரும்பியதன் பின்புலமும் அதுவாக தான் இருக்க முடியும் என அவதானிகள் கருதுகின்றனர்.

சீனத் தூதுவரின் யாழ். பயணம், யாழ் நூலகத்தை இணையவழி நூலகமாக தரமுயத்துமாறு சீனாவிடம் தமிழ் மக்கள் சார்பில் விடுக்கப்பட்ட வேண்டுகோள், இந்தியாவினால் அமைக்கப்பட்ட கலாச்சார மண்டபத்தை 5 வருடங்களுக்கு நிர்வகிக்குமாறு இந்தியாவிடம் விடுக்கப்பட்ட கோரிக்கை, 13 ஆவது திருத்தச்சட்டத்தை நிறைவேற்றுமாறு இலங்கை அரசாங்கத்தை கடந்து இந்தியாவிடம் முக்கிய தமிழ் அரசியல் கட்சிகள் விடுத்த வேண்டுகோள், அதற்கும் மேலான உரிமைகள் வேண்டும் என கடந்த வாரம் கிட்டு பூங்காவில் திரண்ட மக்கள் என்பன தமிழ் மக்கள் தமது அதிகாரங்களைப் பெறுவதற்கும், உரிமைகளை நிலைநாட்டுவதற்கும் பிராந்திய சக்திகளின் பக்கம் தமது கவனத்தைத் திருப்பியுள்ளதாகவே கருதப்படுகின்றது.

அதாவது மேற்குலக நாடுகளும், அதன் அமைப்புக்களும் தொடர்ந்து தமிழ் மக்களை ஏமாற்ற முடியாது என்பதை இது அவர்களுக்கு உணர்த்தியுள்ளது.

எனவேதான் பிரித்தானியா வின் மத்திய தென்னாசியா மற் றும் பொது நலவாய நாடுகளுக் கான அமைச்சர் தாரிக் அஹமட் அவர்கள் இலங்கை வந்ததுடன், வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளுக்கும் சென்றிருந்தார்.

நல்லூர் ஆலயத்திற்கு சீனப் பிரதிநிதிகள் சென்றதுபோன்றே அவர் திருக்கோணஸ்வரர் ஆலயத்திற்கு சென்று வழிபட்டிருந்தார்.

அதாவது ஒரு நாட்டை தமது பிடிக்குள் கொண்டுவராது விட்டால், அங்கு வாழும் இனங்களை அவர்களின் இறைமையை பயன்படுத்தி கையாள முடியும் என்பதும் அனைத்துலக இராஜதந்திரங் களில் ஒன்று. அதனை தான் தற்போது இந்த நாடுகள் கையாள முற்படுகின்றதா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

**அனைத்தலக சமூகத்துடனான உறவுகளின் முக்கியத்துவம்**

அதாவது தமிழ் மக்களின் உறவுகள் என்பது பிராந்திய வல்லரசுகளுடன் ஒரு நல்ல நிலையை எட்டுமாக இருந்தால், அது மேற்குலகத்தின் போக்கில் மாற்றங்களை உண்டுபண்டும். அதே போலவே மேற்குலக நாடுகளுடனான நெருக்கம் பிராந்திய வல்லரசுகளின் போக்கில் மாற்றங்களை ஏற்படுத்தும். இலங்கை அரசின் உத்தியும் அதுவே அதனை நாமும் பின்பற்ற வேண்டும்.

அனைத்துலக சமூகத்துடன் நல்ல உறவுகளை கட்டியெழுப்புவது என்பது ஒரு இனத்தின் வளர்ச்சிக்கு அடிப்படையானது. அதுவே எம்மீதான கவனத்தை ஏற்படுத்தும்.

**ஒரு நாட்டை தமது பிடிக்குள் கொண்டு வராது விட்டால், அங்கு வாழும் இனங்களை அவர்களின் இறைமையை பயன்படுத்தி கையாள முடியும் என்பதும் அனைத்துலக இராஜதந்திரங்களில் ஒன்று. அதனை தான் தற்போது இந்த நாடுகள் கையாள முற்படுகின்றதா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.**

இந்த வருடம் இலங்கை அரசு பொருளாதார ரீதியாக கடுமையான சவால்களை எதிர் கொள்ளும் என ஐ.நா தெரிவித்துள்ளது. இலங்கையின் நிலை குறித்து தனது பயணிகளை எச்சரித்துள்ளது கனடா. தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்க்ஷ பதவிக்கு வந்த பின்னர் வெளிநாட்டுச் சேமிப்பாக இருந்த 7 பில்லியன் டொலர்களை கடன் தொகையை செலுத்துவதற்கு பயன்படுத்தியுள்ளார்.

**இலங்கை எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடி..**

தற்போது எரிபொருள், மருந்துகளை வாங்க இந்தியாவையும், அரிசிக்கு சீனா மற்றும் பாகிஸ்தானையும் நம்பியிருக்கின்றது இலங்கை அரசு.

இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடியை சாதகமாக்கி திருமலை எண்ணெய்க்குதங்களை இந்தியாவும், தென்னிலங்கையின் பெரும் பகுதிகளை சீனாவும் கைப்பற்றி வருகின்றன.

எனவே நாமும் இலங்கை அரசின் தற்போதைய நிலையை எமக்கு சாதகமாகப் பயன்படுத்த வேண்டும் என்றால், தேசியப் பிரச்சனை தொடர்பில் ஒரு பொதுவான கொள்கையும், அனைத்துலக சமூகத்துடனான நல்லுறவுகளும் அவசியமானது. அதனை தான் அரசியல் கட்சிகளிடமும், பொது அமைப்புகளிடமும், புலம்பெயர் அமைப்புகளிடமும் தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர். ■





குடும்பத்தினருடன் கலாநிதி வைத்திலிங்கம் துரைசாமி

# சந்திரனில் மனிதன் கால் பதித்தபோது வழிநடத்திய குழுவில் இருந்த தமிழர்

## 90ஆவது அகவையில் நாசா விண்வெளி ஆய்வு மையத்தின் முன்னாள் தமிழ் விஞ்ஞானி வைத்திலிங்கம் துரைசாமி

**கனடாவிலிருந்து சிவ - பஞ்சலிங்கம்**

சந்திரனுக்கு மூன்று நபர்களை அனுப்பி வைத்த அமெரிக்க நாசா விண்வெளி ஆய்வு மையத்தில் கூட்டாக பணிபுரிந்த விஞ்ஞானிகளில் ஒரேயொரு ஈழ தமிழன், அமெரிக்காவில் வாழ்ந்து கொண்டு தமது 90ஆவது பிறந்த தினத்தினை கொண்டாடும் கலாநிதி வைத்திலிங்கம் துரைசாமி.

குப்பிழான் கிராமத்தினை பிறப்பிடமாக கொண்டவர். தாம் பிறந்த கிராமத்தின் மீது கொண்ட அபிமானத்தினால் அமெரிக்காவில் பிறந்து, இன்று அங்கு வசிக்கும் தமது கடைசி பிள்ளையின் நடுப்பெயரினை அவர் பிறந்தபோது “குப்பிழான்” என வைத்து அதுவே இன்றும் பேணப்படுகின்றது.

வைத்திலிங்கம் துரைசாமியின் தந்தை தமது இளமை காலத்தில் தாயக மண்ணிலிருந்து கடல் கடந்து சென்று 20ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலங்களில் மலேசியாவில் புகையிரத பிரிவில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்.

மாணவ பருவ காலங்களில் குப்பிழான் கிராமத்தில் தமது தந்தையின் விவசாய விளைநிலங்களில் இரவு பகலாக வேலை செய்வதும், சுன்னாகம் - ஸ்கந்தவரோதயா கல்லூரிக்கு தினமும் கால்நடையாகவும், ஓட்டமுமாக சென்று படித்து வந்ததும் இவர் வாழ்வின் சுவையான காலங்களாகும்.

இலங்கை பல்கலைக்கழகத்தில் கணித, விஞ்ஞான துறையில் பட்டப்படிப்பினை முடித்தபின்பு, அங்கு பகுதிநேர விரிவுரையாளராக பணிபுரிந்து வந்த நேரம், அவர் ஏற்கனவே கல்வி கற்ற யாழ் மத்திய கல்லூரி நிர்வாகம் இவரது பல்கலைக்கழக பேராசிரியர் ஊடாக தங்கள் கல்லூரியில் விசேட நியமனம் வழங்க தயார் நிலையில் அழைப்பு விடுத்திருந்தது.

தொடர்ந்து தமது வாலிப வயது காலங்களில் யாழ் மத்திய கல்லூரியில் உயர்தர வகுப்புகளுக்கு கணிதம், பௌதிகவியல் கற்பிக்கும் ஆசிரியராகவும், மாணவர் விடுதி பொறுப்பாளராகவும் சில காலங்கள் பணிபுரிந்து வந்தபோது, தமது கல்விதுறை சார்ந்த தகைமைகளை மேலும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்னும் நோக்கில் இங்கிலாந்து சென்று “பட்டவியல் கணக்காளர்” கல்வி துறையில் பயில்வதற்கு மனு செய்து, அனுமதி பெற்று அங்கு செல்வதற்குரிய விசா, கப்பல் பிரயாண ஒழுங்குகளை மேற்கொண்டார்.

இவரது பிரயாணமும் கொழும்பு துறைமுகத்திலிருந்து, அந்த காலத்திற்குரிய 100 இங்கிலாந்து பவுண்ஸ் கப்பல் கட்டணத்துடன் ஆரம்பித்து மூன்று கிழமையின் பின்பு, ஐந்து நாடுகளின் துறைமுகங்களில் அவர் சென்ற பிரயாண கப்பல் தரித்து நின்று நின்று, இறுதியில் இங்கிலாந்து நாட்டின் “சவுதம்ரன்” கப்பல் துறைமுகத்தினை போய் சேர்ந்தது.

அதே துறையில் பணி புரிந்து கொண்டு பட்டய கணக்காளர் கல்வியினை தொடர்வதே அடுத்த அவரது நோக்கமாகவிருந்தது. “கணக்காளர்” தொழில் என்பது ஒரு கௌரவமான அலுவலக உத்தியோகத்தர் மட்டுமே என்றதொரு பார்வை முதல் ஐந்து மாதத்தினுள் அவர் மனதில் எழுந்தால் தமக்கு தமது எதிர்கால வாழ்வில், தமது ஆற்றல், திறமைகளை வெளிகொணர இது உகந்ததல்ல என்ற எண்ணங்கள் அவரது மனதில் அந்த நேரம் பல குழப்பங்களை உருவாக்கியிருந்தது.

லண்டன் நகரின் நூலகம் ஒன்றுக்கு சென்றபோது, அந்த காலம் (1958) பிரித்தானிய காலணித்துவ நாடுகளில் ஒன்றான “ஜீமன்” நாட்டில் ஆசிரிய தொழிலுக்கு விண்ணப்பங்கள் கோரும் தகவல் கிடைத்ததும் அதற்கு மனு செய்தார்.

உடனடியாக அவர் பாதை மாறியது. அவரது விண்ணப்பம் ஏற்கப்பட்டு லண்டனில் நேர்முக பரீட்சை நடத்தப்பட்டு பிரித்தானியாவின் காலனித்துவ ஆதிக்கத்திலிருந்த அந்த அராபிய நாட்டில் ஆசிரிய நியமனமும் கிடைத்து விட்டது. லண்டனில் தொடரவிருந்த பட்டய கணக்காளர் கனவினை நிறுத்திவிட்டு அராபிய நாடான ஜீமன் சென்று அங்கு ஆசிரிய தொழில் செய்தார்.

1960ஆம் ஆண்டு! தாயக மண் திரும்பி வந்து இல்லற வாழ்வில் இணைந்து கொண்டார்.

யோகராணி! இவரது இல்லத்தரசி! யாழ்ப்பாணத்தில் ஊரெழுவை பூர்வீகமாக கொண்டவர். சென்னைப் பல்கலைக்கழக விஞ்ஞான பட்டதாரி! இவர்கள் இல்லற வாழ்வில் மூன்று பிள்ளைகள். மூத்த மகன் பிரகாஷ் பல் மருத்துவர். மகள் கல்பனா மருத்துவர். இளைய மகன் கணேஷ் தகவல் தொழில் நுட்பவியலாளர். தற்போது மூவரும் அமெரிக்காவில் பணிபுரிகின்றனர். திருமணத்தின் பின்பு மீண்டும் ஜீமன் நாடு சென்று தமது ஆசிரிய பணியினை தொடர்ந்தார்.

1961ஆம் ஆண்டு! அமெரிக்காவில் பணிபுரிந்து கொண்டிருந்த இவரது பல்கலைக்கழக கால நண்பன், பௌதிகவியல் நிபுணர் கலாநிதி அருணாசலத்தின் ஆலோசனைகள், வழிகாட்டல்களை ஏற்று அமெரிக்கா சென்று அங்குள்ள மசாசசுசெற்ஸ் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்று முதுமாணி பட்டம் பெற்றார்.

தொடர்ந்து அமெரிக்காவின் “மேரிலான்ட் பல்கலைக்கழகத்தில்” பிரயோக கணிதத்தில் கலாநிதி பட்டம் பெற்றார். “கலாநிதி” பட்டம் பெற்றதனை தொடர்ந்து சர்வதேச ரீதியில் தொழில்நுட்ப தகவல்களை வழங்கும் அமெரிக்காவின் பிரபல்யமான தொலைபேசி மற்றும் தொலைக்காட்சி கம்பனியின் நுண்பரிசோதனை கூடத்தில் தொழில்நுட்பவியல் விஞ்ஞானியாக தமது பணியினை தொடர்ந்தார்.

விண்வெளி ஆய்வுகளை மேற்கொள்ளும் சர்வதேச விண்வெளி பல்கலைகழகமான அமெரிக்க நாசா பல்கலைக்கழக விண்வெளி ஆய்வுகளுக்கு தொலை தொடர் தொழில்நுட்பங்களை வழங்கும் ஒரு நிறுவனமாக இவர் பணிபுரிந்த “பெல் நுண்பரிசோதனை மையம்” கூட்டாக சேர்ந்து பணிபுரிந்தது.

இந்த காலங்களில் கூட்டாக இயங்கிய நாசா விண்வெளி விஞ்ஞானிகளுடன் சேர்ந்து பணிபுரிந்து, தமது கல்வி, புலமைகள், ஆளுமை திறமைகளை விண்வெளி ஆராய்ச்சி துறைகளுக்கு வழங்கி பல வெற்றிகரமான விஞ்ஞான ஆய்வுகளுக்கு கூட்டான கைகொடுப்பாக செயல்பட்டது அவர் வாழ்வில் ஒரு சாதனைமிகுந்த காலமாகும்.

1969ஆம் ஆண்டு! யூலை 9ஆம் திகதி! உலக வரலாற்றில் ஒரு மறக்க முடியாத சாதனை கண்ட தினம்.

சந்திரனில் மனிதன் கால் பதித்த நாள். நீல் ஆம்ஸ்ரோங்க் முதல் நபராக சந்திரனில் கால் பதித்து நடந்து அமெரிக்காவின் தேசிய கொடியினை சந்திரனில் நாட்டுகின்றார். இவரை தொடர்ந்து இரண்டாவது நபராக கால் பதித்து நடக்கின்றார் புஷ் ஆல்றின்!

மூன்றாவது விண்வெளி விஞ்ஞானியாக சந்தரனில் நின்றவர் மைக்கல் ஹொலின்ஸ். உலகநாடுகள் தொலைக்காட்சிகள் மூலம் இவ் சாதனைகளை பார்த்து கொண்டிருந்தனர். சந்திரனில் கால் பதிக்கும் இவர்களை தளத்திலிருந்து நாசா விண்வெளி பல்கலைக்கழக விஞ்ஞானிகள் தொடர்ந்து தூக்கமேயின்றி வழி நடத்துகின்றனர்.

அந்த விஞ்ஞானிகள் குழுவில் தொடர்புகளை தொடரும் தொழில் நுட்பவியலாளர்களுள் முக்கியமானவராக கலாநிதி. வைத்திலிங்கம் துரைசாமியும் செயல்பட்ட வண்ணமேயிருக்கின்றார்.

“நாசா அப்பலோ சாதனை விருது” அமெரிக்க நாசா விண்வெளி மையத்தினால், ஜூலை1969யில் இவருக்கு வழங்கப்பட்டது.

சந்திரனில் மனிதன் தடம் பதித்த அந்த காலம்! அவர்களை வெற்றிகரமாக தடம் பதிப்பதில் செயல்பட்ட விஞ்ஞானிகள் குழுவில் நமது தாயக மண்ணைச் சேர்ந்த இருவர் பணிபுரிந்தனர்.

ஒருவர் கலாநிதி சிறில் பொன்னம்பெருமா என்ற சிங்கள இனத்தினை சேர்ந்த இரசாயனவியல் நிபுணர் நாசா விண்வெளி ஆய்வு பல்கலைக்கழகத்தின் இரசாயன கூர்ப்பு துறையின் பொறுப்பாளராக அந்த நேரம் பணிபுரிந்து வந்தவர் ஆவார். சந்திரனிலிருந்து எடுத்து வரப்பட்ட மண்ணை பரிசோதனை செய்யும் விஞ்ஞானியாக அவர் செயல்பட்டார்.

மற்றவர் கலாநிதி வைத்திலிங்கம் துரைசாமி விண்வெளியில் சுற்றி சந்திரனில் தடம் பதித்து நிற்கும் வீரர்களுடன் தொலை தொடர்புகளை மேற்கொள்ளும் விஞ்ஞானிகள் குழுவில் இயங்கியவர்.

இங்கு இன்னொரு விடயத்தினையும் குறிப்பிட்டே யாக வேண்டும். சந்திரனுக்கு மனிதர்களை அனுப்பி சாதனை படைத்த நாசா விண்வெளி ஆய்வு விஞ்ஞானிகளில் ஒருவர் தங்கள் நாட்டினை சேர்ந்தவர் கலாநிதி சிறில் பொன்னம்பெருமா என பெருமையுடன் அன்றைய இலங்கை அரசு அந்த காலங்களில் பறைசாற்றி கௌரவித்தது.

ஆனால், அதே குழுவில் பணிபுரிந்து சாதனை படைத்த இலங்கை தேசத்தினை சேர்ந்த இன்னொரு விஞ்ஞானியான கலாநிதி. வைத்திலிங்கம் துரைசாமியை தமிழன் என்ற காரணமாகவோ என்னவோ இலங்கை அரசு பெரிதாக திரும்பிப் பார்த்ததாக செய்திகள் எவையுமில்லை.

ஆனால், தொடர்ந்து தமது விடுமுறை காலங்களில், அவர் தாயக மண் திரும்பியபோது அவரது பிறந்த ஊரான குப்பிழான் கிராமம் சிறுவிழா கோலம் கொண்டு அவரை கௌரவித்த நிகழ்வுகள் எனது சிறு வயதில் அங்கு நான் கண்ட காட்சிகளாகும். அதே நேரம் கிராமத்திலிருந்து முதன்முதல் கலாநிதி பட்டம் பெற்றவர் என்ற பெருமையும் அவருக்கு உண்டு.

அமெரிக்காவில் ஓய்வு நிலைமையில் வாழ்ந்து கொண்டிருக்கும் இவரை சில வருடங்களின் முன்பு கனடாவில் இயங்கும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினர் தங்கள் ஆண்டு விழாவில் பிரதம விருந்தினராக அழைத்து கௌரவித்திருந்தனர். சந்திரனில் மனிதர்களை தடம் பதிக்க வைத்த அந்த கால தங்கள் அனுபவங்களை விழா மேடையில் தமது நீண்ட உரை யின்போது தெளிவு பண்ணியிருந்தார்.

கனடாவிற்கு அவர் வருகை தரும் காலங்களில் தமிழர் இல்லங்களில் நடக்கும் சந்திப்புகள், விருந்துபசாரங்களில் அவரின் கடந்தகால கல்விதுறை, விண்வெளி ஆராய்ச்சி துறைகளின் சாதனைகள் பற்றிய அனுபவங்களின் சம்பாஷணைகள் என்றும் எமக்கு மிக ஆர்வமாகவும், பல விடயங்களை கற்றுக் கொண்ட உணர்வுகளாகவும், எமது மனதில் ஓடிக்கொண்டேயிருக்கும்.

ஓய்வு பெற்று அமெரிக்காவில் வாழும் கடந்த 30 ஆண்டுகளில் தனி தனி மாணவர்களுக்குரிய விசேட கணித ஆசிரியராக பணிபுரிந்தார். ஓட்ட போட்டிகள் போன்ற விளையாட்டு துறைகளில் பங்கு பற்றுவது தமது முதுமை காலங்களிலும் அவருக்கு அலாதி பிரியமானதொன்றாகும். ■

ஈழநாடு



# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி


**மாதிரிப் பரீட்சை வினாத்தாள்**

கல்வி tv CHANNEL

21. | நீலம் | பச்சை | மஞ்சள் | வெள்ளை | கறுப்பு |

என்ற ஒழுங்கில் நிற அட்டைகள் அடுக்கப்பட்டுள்ளன. இவ் ஒழுங்கை அடிப்படையாகக் கொண்டு சரியான விடையைத் தெரிவு செய்க.
1) 13 ஆவதாக வரும் அட்டை மஞ்சள் நிறமாகும்.
2) 18 ஆவதாக வரும் அட்டை பச்சை நிறமாகும்.
3) 9 ஆவதாக வரும் அட்டை நீல நிறமாகும்.

22. சதுரவடிவக் கடதாசி ஒன்றை உருவில் காட்டியவாறு புள்ளிக்கோடுகள் வழியே மடித்து C இல் குறிப்பிட்டுள்ளவாறு முக்கோணி x வெட்டி நீக்கிய பின் விரிக்கும்போது தோன்றும் சரியான வடிவத்தைத் தெரிவு செய்க.




23. இடைவெளியில் வரவேண்டிய எழுத்துக் கூட்டத்தைத் தெரிவு செய்க.


| M | N | O |   | O | P | Q |   | Q | R | S | ………………… |

1) | S | T | U |  2) | T | U | V |  3) | S | V | W |

24. தரப்பட்ட கூற்றுக்குச் சரியான காரணத்தைத் தெரிவு செய்க.
" கொரோனா நோயை ஒழிக்க வேண்டும் "
1) முகக்கவசம் அணிவதால்
2) கைகளைக் கழுவ வேண்டியிருப்பதால்
3) கொள்ளை நோய் என்பதனால்

25. கீரை வகைகளைச் சமைக்கும்போது உப்பு நீரில் இடுவதற்கான காரணம்.
1) நீண்ட காலம் பாதுகாக்க
2) கிருமிகளை அழிப்பதற்கு
3) விரைவாக வேகவைப்பதற்கு


26. தரப்பட்டுள்ள இரு உருக்களையும் ஒன்றன் மீது ஒன்று வைக்கும் போது கிடைக்கும் உருவைத் தெரிவு செய்க.




27. ஆறு விளிம்புகளைக் கொண்ட திண்மவுருவும், இரண்டு சமச்சீர் அச்சுக்களைக் கொண்ட தளவடிவமும் முறையே,
1) சதுரமுகி, செவ்வகம் 2) கனவுரு, சதுரம் 3) நான்முகி, செவ்வகம்

28. மே மாதம் 31 ஆம் திகதி புதன்கிழமை எனின், அம்மாதத்தில் உள்ள புதன்கிழமைகளினதும் சனிக்கிழமைகளினதும் எண்ணிக்கை முறையே.
1) 5, 4 2) 5, 5 3) 4, 5


29. "முயற்சி செய்தால் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையலாம்" என்பது.
1) இது எப்போதும் உண்மையாகும்.
2) இது பெரும்பாலும் உண்மையாகும்.
3) இது ஒருபோதும் உண்மையானதன்று.

30. 
முழு உருவின் பரப்பளவானது நிழற்றப்பட்ட பகுதியின் பரப்பளவைப் போல் எத்தனை மடங்கு பெரியது?
1) மூன்று மடங்கு 2) இரண்டு மடங்கு 3) நான்கு மடங்கு

31. " நல்லவர்களுக்குச் செய்த உதவி" எதைப் போன்றது?
1) தாமரை இலைமேல் நீர்த்துளி போன்றது.
2) கல்லின் மேல் எழுத்தைச் செதுக்குவதைப் போன்றது.
3) சூரியனைக் கண்ட பனி போன்றது.

32. "மக்கள்" என்ற சொல்லில் ஓரெழுத்தை நீக்கினால் வரும் சொல்லின் ஒத்த பதத்தைக் குறித்து நிற்பது?
1) புத்திரன் 2) புத்திரி 3) மகள்

❖ **கீழ்வரும் வரிப்படத்தை அவதானித்து 33 ஆம் 34 ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.**




## விடைகள்

| | | |
|---|---|---|
| 21. 1 | 26. 1 | 31. 2 |
| 22. 3 | 27. 3 | 32. 2 |
| 23. 1 | 28. 1 | 33. 1 |
| 24. 3 | 29. 2 | 34. 3 |
| 25. 2 | 30. 3 | 35. 2 |
| | | 36. 3 |

## கல்வி tv CHANNEL-1

**10.02.2022**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | சங்கீதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | வரலாறு |
| 05.00 | A/Lவினாத்தாள் | சைவசமயம் கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| | மறு ஒளிபரப்பு | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சங்கீதம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

## கல்வி tv CHANNEL - 2

**10.02.2022**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கதை |
| 09.00 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-03 | சைவசமயம் |
| 10.30 | தரம்-03 | அழகியல் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | கணிதம் - paper |
| 01.15 | தரம்-05 | சைவசமயம் |
| 02.00 | தரம்-05 | Gentral knowledge |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 06.00 | தரம்-03 | சைவசமயம் |
| 06.45 | தரம்-03 | அழகியல் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | கணிதம் - paper |
| 09.00 | தரம்-05 | சைவசமயம் |
| 09.45 | தரம்-05 | Gentral knowledge |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சைவசமயம் |
| 12.30 | தரம்-03 | அழகியல் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | கணிதம் - paper |
| 02.45 | தரம்-05 | சைவசமயம் |
| 03.30 | தரம்-05 | Gentral knowledge |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

## பதுளை மருத்துவமனையில் 55 கொரோனா தொற்றாளர்!

பதுளை, பெப். 10

பதுளை பொது வைத்தியசாலையில் 15 மருத்துவர்கள் உட்பட 55 வைத்தியசாலை ஊழியர்களுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனை அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஊவா மாகாண இணைப்பாளரும் பதுளை பொது வைத்தியசாலையின் சிரேஷ்ட வைத்திய அதிகாரியுமான மருத்துவர் பாலித ராஜபக்ஷ தெரிவித்தார்.

பதுளை பொது வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் இருந்த 9 மருத்துவர்களில் 6 பேர் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும், இரு தாதியர் மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவில் பணிபுரியும் கனிஷ்ட ஊழியர் ஒருவரும் வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் கூறப்பட்டது. (ஐ)

## அவசர தேவையுடையோருக்கே இனி கொரோனா பரிசோதனை!

கொழும்பு, பெப். 10

அத்தியாவசிய மற்றும் அவசர தேவைகள் உள்ளவர்களுக்கு மாத்திரம் கோவிட்-19 பரிசோதனையை முன்னெடுக்குமாறு சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

நாட்டில் அன்ரிஜென் சோதனை கருவிகளின் பற்றாக்குறையை சுகாதார அதிகாரிகள் எதிர்நோக்கியுள்ளதே மேற்கண்ட தீர்மானத்துக்கு காரணம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே ஹேமந்த ஹேரத் இதனைக் கூறினார்.

விநியோகஸ்தர்கள் தற்போது குறைந்த எண்ணிக்கையிலான சோதனை கருவிகளை மட்டுமே பெறுகின்றனர்.

இதற்கு முன்னர் சில நாட்களுக்கு ஒருமுறை மில்லியன் கணக்கான பரிசோதனைக் கருவிகளைப் பெற்றனர் என்றும், ஆனால், தற்போது அவை பற்றாக் குறையை எதிர்கொள்வதாகவும் அவர் மேலும் கூறினார். (ஐ)

# நாட்டின் சட்டங்கள் மீறப்பட்டும் நடவடிக்கைகள் எதுவுமில்லை!

## மாநகர முதல்வர் சரவணபவன்

மட்டக்களப்பு, பெப்.10

**மட்டக்களப்பு மாநகர சபையின் கட்டளை சட்டம், இலங்கை சோசலிஷ குடியரசின் சட்டம் மீறப்படுவது வெளிப்படையாக இருந்தும் மாகாண சபை நிர்வாகம் இதற்கு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று மாநகர முதல்வர் தி. சரவணபவன் தெரிவித்துள்ளார்.**



மட்டக்களப்பு மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளின் அபிவிருத்திக்காக 2020ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதி மூலமான வேலைத்திட்டங்கள் ஆரம்பித்துவைக்கப்பட்டு வருகின்றன. இதன்கீழ், மட்டக்களப்பு விமான நிலைய பிரதான வீதியின் முதலாம் மற்றும் இரண்டாம் குறுக்கு வீதிகளின் புனரமைப்பு பணிகள் நேற்று ஆரம்பித்துவைக்கப்பட்டன.

வட்டார உறுப்பினர் அ. கிருரஜன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், மட்டக்களப்பு மாநகர சபையின் மேயர் கலந்துகொண்டு, வீதி அபிவிருத்தி பணியை ஆரம்பித்துவைத்தார். இதன்போது உரையாற்றிய மாநகர மேயர், “இந்த வேலைத்திட்டங்கள் 2020ஆம் ஆண்டு பாதீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தன. 2020ஆம் ஆண்டு மத்திய அரசு மற்றும் வேறு நிறுவனங்கள் ஊடாக வழங்கப்பட்ட பெரிய வேலைத்திட்டங்கள் இருந்த காரணத்தால் டிசெம்பர் மாதத்தில் செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

“இருந்தபோதிலும் 2020 டிசெம்பரில் நிர்வாகத்தில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக இந்த வேலைகளை அமுல்படுத்துவதில் தாமதங்கள் ஏற்பட்டன. இதேபோன்று 2021ஆம் ஆண்டு வேலைத்திட்டங்களும் தாமதப்படுத்தப்பட்டிருந்த காரணத்தால் மாற்று திட்டமாக மாநகர சபை நேரடியாக வேலைத் திட்டங்களை செய்யாது, வெளியாருக்கு ஒப்பந்த அடிப்படையில் இதனை வழங்கி பூர்த்திசெய்வது என்று மாநகர சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் வெளியாருக்கு வழங்கப்பட்டு, திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன.

“மாநகர சபையின் செயற்பாடுகளுக்கு தடையாகயிருக்கும் அதிகாரி மாற்றப்படும்பட்சத்தில், மாநகர சபை நேரடியாக களத்தில் இறங்கி பொதுமக்களுக்கு அதியுட்ச நன்மைகளை வழங்க கூடிய வகையிலான செயல்பாடுகள் முன்னெடுக்கப்படும். வெளியாருக்கு ஒப்பந்தம் வழங்கும்போது, சுமார் 40 சதவீதமான வேலைகள் குறைவாக செய்யக்கூடிய நிர்ப்பந்தம் உள்ளது.

“மட்டக்களப்பு மாநகரசபையின் கட்டளை சட்டம், இலங்கை சோசலிச குடியரசின் சட்டம் மீறப்படுவது வெளிப்படையாகயிருந்தும் மாகாண சபை நிர்வாகம் இதற்கு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இது தொடர்பாக ஆணைக்குழுக்களை நிறுவியிருந்துடன், அதன் ஊடாக மாநகர சபையின் கட்டளை சட்டம் மீறப்பட்டுள்ளது தெளிவாகியிருந்தது. இதனை மீறிய அதிகாரிக்கு எதிராக எந்தவிதமான ஒழுக்காற்று நடவடிக்கைகளும் இதுவரை எடுக்கப்படவில்லை. அவ்வாறு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால், மாநகர சபையின் செயல்பாடுகளில் எந்தவித தடங்கல்களும் ஏற்பட்டிருக்காது” - என்றார். (ஐ)





## மன்னார் முன்பள்ளி ஆசிரியர்கள் நேற்று கவனயீர்ப்பு போராட்டம்!

மன்னார், பெப். 10

மன்னார் மற்றும் மடு வலய கல்விப் பணிமனைக்குட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்கள் நேற்று புதன்கிழமை காலை 8.30 தொடக்கம் அடையாள கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர். நிரந்தர நியமனம் மற்றும் சம்பள அதிகரிப்பை வலியுறுத்தி மன்னார், நானாட்டான், மடு,முசலி,மாந்தை மேற்கு பகுதிகளை சேர்ந்த முன்பள்ளி ஆசிரியர்கள் நேற்று மன்னார் மாவட்ட செயலகத்துக்கு முன்பாக கவனயீர்ப்பு போரட்டத்தில் ஈடுபட்டனர்.

25 வருடங்களுக்கு மேலாக முன்பள்ளி ஆசிரியர்களாக கடமையாற்றி வரும்நிலையில் இதுவரை தங்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை எனவும் முன்பள்ளிகளில் பல தரப்பட்ட கல்வி நடவடிக்கைகளுக்கு தங்களை பயன்படுத்துகின்றபோதும் தங்களுக்கு மாதம் வெறுமனே 6 ஆயிரம் ரூபா கொடுப்பனவு மாத்திரமே வழங்கப்படுவதாகவும் முன்பள்ளி ஆசிரியர்கள் சுட்டிகாட்டியுள்ளனர்.

ஜனாதிபதி,ஆளுநர் மற்றும் சம்பந்தப்பட உயர் அதிகாரிகளுக்கு தங்கள் கோரிக்கைகளை மகஜர்களாகவும் நேரில் சந்தித்தும் தெரிவித்துள்ள போதும் தங்களுக்கு இதுவரை உரிய தீர்வு கிடைக்கவில்லை எனவும், விரைவில் தமது கோரிக்கை நிறைவேற்றப்படாவிட்டால் தொடர் போராட்டங்களை முன்னெடுக்கப்போவதாகவும் முன்பள்ளி ஆசிரியைகள் தெரிவித்தனர்.

அதேநேரம் கொடுப்பனவு அதிகரிக்கப்படவேண்டும், 6000 ரூபா ஊக்குவிப்பு தொகை இன்று போதுமானதா?,நிரந்தர நியமனம் வேண்டும்,முன்பள்ளி கல்வி முக்கியம் முன்பள்ளி ஆசிரியர்கள் முக்கியம் இல்லையா போன்ற பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பாதாதைகளை ஏந்தியவாறு முன்பள்ளி ஆசிரியர்கள் கவனயீர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டதுடன் தங்கள் கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றையும் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெலிடம் கையளித்தனர். (அ)

## காணிக்கை மாத ஆலய கொடியிறக்கத் திருவிழா!



மட்டக்களப்பு, பெப். 10

மட்டக்களப்பின் தொன்மை மிகு கத்தோலிக்க ஆலயமான தாண்டவன்வெளி காணிக்கை மாதா கொடி இறக்க திருவிழா நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

மட்டு. - அம்பாறை மறை மாவட்ட ஆயர் ஜோசப் பொன்னையா ஆண்டகை தலைமையில் இடம்பெற்றது. இந்த ஆலய வருடாந்த திருவிழாவின் நவ நாட்களும் காலை மற்றும் மாலை வேளைகளில் திருவிழா திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் மாலை ஆலயப் பங்குத் தந்தை தலைமையில் பங்கு மக்களால் திருவுருவ சுற்றுப்பிரகாரப் பவனி கொரோனா தொற்று பரவல் காரணமாக ஆலய வளாகத்தில் இடம்பெற்றது.

மட்டு.-அம்பாறை மாவட்ட ஆயர் கலாநிதி ஜோசப் பொன்னையா ஆண்டகை தலைமையில் இறுதி நாள் திருவிழாவில் நாட்டில் கொரோனா தொற்றிலிருந்து மக்கள் சுகம் பெற வேண்டியும் அரசாங்கத்திற்கு நல்லாசி வேண்டியும் விசேட கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

திருவிழாவின் இறுதி நாள் நிகழ்வான ஆலய பங்குதாரர்களால் கடந்த மாதம் 28ஆம் திகதி ஏற்றப்பட்ட கொடி ஆலய பங்கு தந்தை ஏ.ஸ்ரனிஸ்லோஸ் அவர்களால் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்ட பின் கொடி இறக்கம் இடம்பெற்றது. (ஐ)

# உக்ரைன் எல்லையில் பதற்றத்தை தணிக்க உடனடியாக நடவடிக்கை

## மக்ரோனிடம் விளாடிமிர் புடின் உறுதி

மொஸ்கோ, பெப். 10

உக்ரைன் எல்லைக்கு அருகே ரஷ்யப் படைகள் நெருக்கடியை அதிகரிக்காது என்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தன்னிடம் உறுதியளித்ததாக பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் தெரிவித்தார்.

உக்ரைன் எல்லை அருகே சுமார் 100,000 துருப்புக்களை ரஷ்யா குவித்துள்ளது. இந்நிலையில் உக்ரைன் மீது ரஷ்யா எந்நேரமும் போர் தொடுத்து அந்த நாட்டைக் கைப்பற்றலாம் என அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் எச்சரித்துள்ளன.

முழு அளவிலான படையெடுப்பிற்கு தேவையான 70 வீத இராணுவப் படைகளை ரஷ்யா திரட்டியுள்ளதாக அமெரிக்க அதிகாரிகள் கூறியுள்ளனர்.

எனினும் இந்தக் குற்றச்சாட்டுக்களை ரஷ்யா மறுத்து வருகிறது.

இந்நிலையில் போர்ப் பதற்றங்களை தணிக்கும் வகையில் பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரோன் ரஷ்யா மற்றும் உக்ரைனுக்கு பயணம் செய்து அந்த நாடுகளின் தலைவர்களை சந்தித்தார்.

கடந்த திங்கட்கிழமை மொஸ்கோவில் புடினுடன் கிட்டத்தட்ட



6 மணி நேரங்கள் இடம்பெற்ற பேச்சுவார்த்தைக்கு பின்னர் மக்ரோன் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை உக்ரைன் தலைநகர் கீவ் சென்றடைந்தார்.

உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கியுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தைக்குப் பின்னர் இருவரும் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்துப் பேசினர்.

இங்கு கருத்து வெளியிட்ட மக்ரோன், ரஷ்யா - உக்ரைன் இடையிலான சமரசப் பேச்சுவார்த்தைகளை தொடங்குவதற்கான நல்ல வாய்ப்பு இருப்பதாக கூறினார்.

இதற்கிடையில் பதட்டங்களைக் குறைக்க தீவிர நடவடிக்கைகளை எடுக்குமாறு புடினுக்கு உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி அழைப்பு விடுத்தார்.

வெற்று வார்த்தைகளை நான் நம்பவில்லை. உறுதியான நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் ஒவ்வொரு அரசியல்வாதியும் வெளிப்படையாக இருக்க முடியும் என்று நான் நம்புகிறேன் எனவும் அவர் கூறினார்.

இந்தப் பயணத்தை தொடர்ந்து பேர்லினுக்குச் சென்ற பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரோன், அங்கு ஜேர்மனி மற்றும் போலந்து தலைவர்களுடன் இணைந்து உக்ரேனிய இறையாண்மையை பாதுகாப்பதற்கான தங்கள் கூட்டு ஆதரவை வெளிப்படுத்தினார். (அ)

# கொரோனா பாதிப்பு 40 கோடியை கடந்தது!

## உலகெங்கும் 58 இலட்சம் பேர் இதுவரை மரணம்

நியூயோர்க், பெப். 10

உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 40 கோடியை கடந்துள்ளது. அத்துடன், கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையும் 58 இலட்சத்தை நெருங்கியுள்ளது.

நேற்று காலை வரையான தரவுகளின் படி மொத்தம் 40 கோடியே 4 இலட்சத்து 28 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். 57 இலட்சத்து 81 ஆயிரத்து 769 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, கொரோனா தொற்றுக்குள்ளாகிப் பாதிக்கப்பட்டவர்களில் 32 கோடியே 73 இலட்சத்து 7 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் குணமடைந்துள்ளனர்.

தற்போது கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களில் 7 கோடியே 39 லட்சத்து 35 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களில் 90 ஆயிரம் வரையிலானோர் கடுமையாகப் பாதிக்கப்பட்டு தீவிர சிகிச்சைப் பிரிவில் உள்ளனர்.

சீனாவின் வூஹான் நகரில் 2019 ஆம் ஆண்டு கொரோனா வைரஸ் முதன்முதலில் கண்டுபிடிக்கப்பட்டது. தற்போது கொரோனா வைரஸ் 221 நாடுகள் மற்றும் பிரதேசங்களில் இந்த வைரஸ் பரவி பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது. கொரோனாவை கட்டுப்படுத்த தடுப்பூசி செலுத்தும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வரும் நிலையிலும் வைரஸ் உருமாற்றமடைந்து பாதிப்பு அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)



# மத்திய கொலம்பியாவில் கனமழையால் 14 பேர் பலி

பொகோட்டா, பெப். 10

மத்திய கொலம்பியாவில் கனமழையால் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி குறைந்தது 14 பேர் உயிரிழந்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன் தினம் செவ்வாயன்று ரிசரால்டா மாகாணத்தில் பல வீடுகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டதாகவும் இதில் காயமடைந்த 35 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. பெருக்கெடுத்த ஆற்றுக்கு அருகில் வசிக்கும் குடியிருப்பாளர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மேலும் மீட்புப் பணிகளில் குழுக்கள் ஈடுபட்டுள்ளதாக கொலம்பியாவின் பேரிடர் முகாமைத்துவ அதிகாரிகள் தெரிவித்தனர். (அ)

# ஏவுகணைகளை மேம்படுத்த தாய்வானுக்கு அமெ. உதவி!

## சீனா கடும் எதிர்ப்பு

பீஜிங், பெப். 10

சீனாவின் அச்சுறுத்தல்களை எதிர்கொண்டு வரும் தாய்வானுக்கு உதவும் வகையில் 100 மில்லியன் டொலர் மதிப்புள்ள ஏவுகணை பாதுகாப்பு அமைப்புகளை மேம்படுத்துவதற்கான ஒப்பந்தத்தில் தாய்வானுடன் அமெரிக்க கையெழுத்திடவுள்ளது.

இந்த ஒப்பந்தத்திற்கு ஜனாதிபதி ஜோ பைடன் நிர்வாகம் ஒப்புதல் அளித்துள்ளது.

தாய்வானின் ஏவுகணை பாதுகாப்பு அமைப்புகளை மேம்படுத்துவதற்கான இந்த ஒப்பந்தம் குறித்த உத்தியோகபூர்வ அறிவிப்பை அமெரிக்க வெளியுறவுத்துறை வெளியிட்டுள்ளது.

தாய்வானுடனான எந்தவொரு ஆயுத ரீதியாக ஒப்பந்தங்களையும் கடுமையாக எதிர்த்து வரும் சீனா, இந்த ஒப்பந்தம் குறித்து கடும் விமர்சனம் வெளியிட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தை திரும்பப் பெற வேண்டும் எனவும் தாய்வானுடன் இராணுவ ரீதியான தொடர்புகளை அமெரிக்கா நிறுத்த வேண்டும் எனவும் சீனா வலியுறுத்தியுள்ளது.


தாய்வானுக்கான இராணுவ ரீதியான உதவிகள் சீனாவின் இறையாண்மை மற்றும் பாதுகாப்பு நலன்களை கடுமையாகக் குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது. மேலும் இது சீனா-அமெரிக்க உறவுகளை மோசமாகப் பாதிக்கும் என சீன வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ஜாவோ லிஜியன் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை தெரிவித்தார்.

தாய்வானை சீனாவின் ஆளுகைக்குள் உள்ள ஒரு பகுதி என சீனா தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. ஆனால் இதனை ஏற்க மறுத்து தாங்கள் ஒரு இறையாண்மை கொண்ட சுயாதீன தனியரசு என தாய்வான் தெரிவித்து வருகிறது.

தாய்வானை அச்சுறுத்தும் வகையில் சீனாவின் இராணுவ விமானங்கள் தாய்வானுக்குள் அடிக்கடி நுழைந்து வெளியேறுவது வாடிக்கையாக உள்ளது. சீனாவின் இந்த நடவடிக்கைக்கு தாய்வான் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்ற போதும் சீனா அதனைக் கண்டு கொள்ளவில்லை.

இவ்வாறான நிலையிலேயே தாய்வானின் தற்போதைய வான் பாதுகாப்பு ஏவுகணைகள் மேம்படுத்தும் வகையிலான ஒப்பந்ததில் அந்நாட்டுடன் அமெரிக்கா கையெழுத்திடவுள்ளது.

இந்த ஒப்பந்தத்துக்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் நிர்வாகம் ஒப்புதல் அளித்துள்ளமைக்கு தாய்வான் தேசிய பாதுகாப்பு அமைச்சு நன்றி தெரிவித்துள்ளது. (அ)



# கனடா—அமெரிக்கா தரைவழி பாதை போராட்டக்காரர்களினால் முடக்கம்!

ஒட்டாவா, பெப். 10

கனேடிய மத்திய அரசின் கட்டாய தடுப்பூசி ஆணைக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டுவரும் சரக்கு வாகன சாரதிகளால் மிகவும் பரபரப்பான கனடா - அமெரிக்கா இடையிலான தரைவழிப் போக்குவரத்தை இணைக்கும் அம்பாசிடர் பாலம் நேற்று முன் தினம் செவ்வாக்கிழமை முற்றுகையிடப்பட்டது.

ஒன்ராறியோவின் வின்ட்சர் பகுதியையும், மெச்சிகனின் டிரொயிட் பகுதியையும் இணைக்கும் அம்பாசிடர் பாலத்தை போராட்டக்காரர்கள் முற்றுகையிட்டதால் இரு திசைகளிலும் போக்குவரத்து ஆரம்பத்தில் தடைப்பட்டது.

எனினும் தற்போது இந்த முற்றுகை தளர்த்தப்பட்டு பாதை மீண்டும் திறக்கப்பட்டுள்ளதாக வின்ட்சர் பொலிஸார் தெரிவித்துள்னர்.

அம்பாசிடர் பாலத்தின் ஊடாக போக்குவரத்து, விநியோகம் தொடர்ந்து சீராக இடம்பெறுவதை நாங்கள் உறுதி செய்வோம். எமது பொருளாதாரத்தில் இந்தத் தரைவழிப் பாதை முக்கியமானது என கனடாவின் பொது பாதுகாப்பு அமைச்சர் மார்கோ மென்டி சினோ நேற்று முன்தினம் செவ் வாய்க்கிழமை செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

கனடா தனது மொத்த ஏற்றுமதியில் 75 வீதமானவற்றை அமெரிக்காவிற்கு அனுப்புகிறது. அம்பாசிடர் பாலத்தின் வழியாக மட்டும் ஒரு நாளைக்கு சராசரியாக 8,000 சரக்கு வாகனங்கள் போக்குவரத்தில் ஈடுபடுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் அமெரிக்கா - கனடா எல்லை முற்றுகை தொடர்பில் கனேடிய அதிகாரிகளுடன் பேசியுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி மாளிகையான வெள்ளை மாளிகையின் செய்தித் தொடர்பாளர் ஜென் சாகி கூறினார்.(அ)



ஈழநாடு





## பாகிஸ்தானுடனான டெஸ்ட் ஆஸி. அணியில் கவாஜா!

சிட்னி, பெப். 10

அவுஸ்திரேலிய அணியின் பாகிஸ்தான் டெஸ்ட் தொடரில் கவாஜா இடம்பெற்றுள்ளார்.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி கடைசியாக 1998 இல் மார்க் ரெய்லர் தலைமையில் பாகிஸ்தான் சென்றது. 24 ஆண்டுக்குப் பின், இப்போது மீண்டும், அவுஸ்திரேலிய அணி பாகிஸ்தான் செல்கிறது. இங்கு மார்ச் 4 - ஏப். 5 வரை 3 டெஸ்ட், 3 ஒருநாள், ஒரு இருபது - 20 போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கவுள்ளது.

டெஸ்ட் போட்டிகள் ராவல்பிண்டி (மார்ச் 4-8), கராச்சி (மார்ச் 12-16), லாகூரில் (மார்ச் 21-25) நடக்கவுள்ளன. இதற்கான அவுஸ்திரேலிய அணி நேற்று அறிவிக்கப்பட்டது. இந்த அணிக்கு மைக் டொனால்ட் தற்காலிக பயிற்றுநராக செயல்படவுள்ளார்.

கடந்த ஆஷஷ் தொடரில் சிறப்பாக விளையாடிய, பாகிஸ்தான் வம்சாவளி வீரரான உஸ்மான் கவாஜா, அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அணி விபரம்:

பட் கம்மின்ஸ் (தலைவர்), அஷ்டன் ஏகர், பொலாந்த், அலெக்ஸ் ஹெரி, கமரூன் கிறீன், ஹரிஸ், ஹசல்வூட், ஹெட், ஜோஷ் இங்லிஸ், கவாஜா, லபுசன், லியொன், மிற்செல் மார்ஷ், நேசர், ஸ்மித், ஸ்ரார்க், சுவெப்சன், வோர்ணர்.

## சிறந்த வீராங்கனையாக சிமோனா ஹாலேப் தெரிவு



லண்டன், பெப். 10

உலக ரெனிஸ் சங்கத்தின் ஜனவரி மாதத்துக்கான சிறந்த வீராங்கனை என்ற விருதை மீண்டும் சிமோனா ஹாலேப் பெற்றுள்ளார்.

கடந்த ஜனவரி மாதத்தில் மெல்பர்னில் நடந்த போட்டியில் டெஸ்டான ஜயாவாவை ஹாலேப் எதிர்கொண்டார். கடினமான நீடித்த இந்தப் போட்டியில் சமநிலையற்ற நிலையில், கோட்டின் அருகாக ஒரு சேர்விஸை ஹாலேப் பெற்றார். அந்த ஷொட்டின் மூலமே அவர் ஜனவரி மாதத்தின் சிறந்த வீராங்கனையாக தெரிவானார்.

ஹாலேப் அந்தப் போட்டியில் வெற்றி பெற்று இறுதியில் பட்டத்தையும் வெற்றி பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது, உலக தரவரிசையில் 23ஆவதுது இடத்தில் இருக்கும் ஹாலேப் 2021ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதமும் இதே விருதை சிமோனா பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மகளிர் ஆஷஷ் தொடர் ஆஸி. அணி சம்பியன்!




பிரிஸ்பேர்ன், பெப். 10

இங்கிலாந்துக்கு எதிராக நடைபெற்ற மூவகை கிரிக்கெட் போட்டிகளைக் கொண்ட மகளிர் ஆஷஷ் தொடரில் தோல்வி அடையாத அணியாக அவுஸ்திரேலியா வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்தது.

3 போட்டிகளைக் கொண்ட இருபது- 20 கிரிக்கெட் தொடர், ஒற்றை டெஸ்ட் போட்டி, 3 போட்டிகள் கொண்ட சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் தொடர் ஆகிய மூவகை கிரிக்கெட் போட்டிகளிலும் 4 போட்டி களில் வெற்றிபெற்று ஆஷஷ் தொடரை அவுஸ்திரேலியா கைப்பற்றியது.

இரண்டு அணிகளுக்கும் இடையில் அடிலெய்டில் நடைபெற்ற 3 போட்டி களைக் கொண்ட மகளிர் சர்வதேச இருபது 20 கிரிக்கெட் தொடரின் ஆரம்பப் போட்டியில் 9 விக்கெட்களால் அவுஸ்திரேலியா வெற்றிபெற்றது. மற்றைய போட்டி மழையால் கைவிடப்பட, அடுத்த போட்டியும் மழையால் நடைபெறவில்லை.

கன்பெராவில் நடைபெற்ற 4-நாள் டெஸ்ட் போட்டி வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது. இதனைத் தொடர்ந்து கென்பெராவில் நடைபெற்ற முதலாவது மகளிர் சரவ்தேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 27 ஓட்டங்களாலும் மெல்பர்னில் நடை பெற்ற இரண்டாவது போட்டியில் 5 விக்கெட்களாலும் அவுஸ்திரேலியா வெற்றிபெற்றிருந்தது. கடைசியாக மெல்பர்னில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற மூன்றாவதும் கடைசியுமான மகளிர் சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியிலும் அவுஸ்திரேலியா 8 விக்கெட்களால் வெற்றிபெற்று தொடரில் தோல்வி அடையாத அணியாக கிண்ணத்தை சுவீகரித்தது.

இந்தத் தொடரில் ஆறுதல் வெற்றியையாவது ஈட்டவேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் கடைசிப் போட்டியில் களம் இறங்கிய ஹீதர் நைட் தலைமையிலான இங்கிலாந்து அணி 49.3 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 163 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

ஆரம்ப வீராங்கனை டெமி போமன்ட் (50), 4ஆம் இலக்க வீராங்கனை நட் சிவர் (46) ஆகிய இருவரும் 3ஆவது விக்கெட்டில் 88 ஓட்டங்களைப் பகிர்ந்திரா விட்டால் இங்கிலாந்து மோசமான நிலைய அடைந்திருக்கும். இவ்விருவரை விட சார்ளி டீன் (18) இரட்டை இலக்க எண்ணிக்கையைப் பெற்ற 3ஆவது வீராங்கனை ஆவார். அவுஸ்திரேலிய பந்துவீச்சில் அனாபெல் சதர்லண்ட் 31 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களையும் மெகான் ஷூட் 25 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

164 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா, 36.2 ஓவர்களில் 2 விக்கெட்களை மாத்திரம் இழந்து 164 ஓட்டங்களைப் பெற்று அமோக வெற்றியீட்டியது.

துடுப்பாட்டத்தில் அணித் தலைவி மெக் லெனிங் ஆட்டம் இழக்காமல் 57 ஓட்டங்களையும் அலிசா ஹீலி 47 ஓட்டங்களையும் எலிஸ் பெரி ஆட்டம் இழக்காமல் 31 ஓட்டங்களையும் ரஷேல் ஹெய்ன்ஸ் 31 ஓட்டங்களையும் பெற்றனர்.

கடைசிப் போட்டியில் இங்கிலாந்து துடுப்பாட்டத்தில் மொத்தமாக 7 பௌண்ட்ரிகளும் 2 சிக்ஸர்களும் மாத்திரமே பெறப்பட்டிருந்தன. ஆனால், அவுஸ்திரேலியா 20 பௌண்ட்ரிகளையும், 2 சிக்ஸர்களையும் விளாசியிருந்தது. (ஐ)

## இங்கிலாந்து டெஸ்ட் அணியில் அண்டர்சன், பிரோட் நீக்கம்!

லண்டன், பெப். 10

மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணியிலிருந்து ஜேம்ஸ் அண்டர்சன், ஸ்ருவர்ட் பிரோட் ஆகியோர் நீக்கப்பட்டனர்.

அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான ஆஷஷ் தொடரில் இங்கிலாந்து அணி படுதோல்வியை சந்தித்தது. இதையடுத்தே இங்கிலாந்தின் முன்னணி வேகப் பந்து வீச்சாளர்களான அண்டர்சன், பிரோட் ஆகியோர் அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

மேற்கிந்தியத் தீவுகளுடனான 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் இளம் வீரர்களுக்கு இங்கிலாந்து அணியில் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

அணி விவரம்:

ஜோ ரூட் (தலைவர்), ஷாக் கிராவ்லி, அலெக்ஸ் லீஸ், ஜொன்னி பெயர்ஸ்ரோ, டான் லோரன்ஸ், பென் ஸ்ரோக்ஸ், ஒல்லி பொப், பென் போக்ஸ், கிறிஸ் வோக்ஸ், ஒல்லி ரொபின்சன், கிரைக் ஓவர்ரன், சகீப் மஹ்மூட், மார்க் வூட், மத்தியூ பர்கின்சன், மத்தியூ பிஷர், ஜாக் லீச். (ஐ)



## ஆஸி.-நியூசி. மோதவிருந்த ரி-20 தொடர் கைவிடப்பட்டது



வெலிங்டன், பெப். 10

அவுஸ்திரேலியா - நியூசிலாந்து அணிகள் மோதவிருந்த 3 போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடர் கைவிடப்பட்டது.

அவுஸ்திரேலிய அணி மார்ச் மாதம் நியூசிலாந்துக்கு சென்று இருபது - 20 தொடரில் பங்கேற்கத் திட்டமிட்டிருந்தது. நான்கு நாட்கள் நேப்பியரில் நடைபெறவிருந்த இந்தத் தொடரைக் கைவிட இரு நாடுகளின் கிரிக்கெட் சபைகளும் சம்மதம் தெரிவித்துள்ளன.

மார்ச் 25ஆம் திகதி ஆரம்பமானவிருந்த இந்தப் போட்டி நியூசிலாந்தின் தனிமைப்படுத்தல் விதிகள் தளர்த்தப்படாமையாலேயே கைவிடப்படுகின்றது. முன்னதாக தனிமைப்படுத்தல் விதிகள் தளர்த்தப்படும் என்று எதிர்பார்ப்பின் அடிப்படையில் இந்தத் தொடருக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால், எதிர்பாரதவிதமாக ஒமைக்ரோன் தொற்று பரவலால் விதிகள் தளர்த்தப்படவில்லை.

இந்த நிலையில், பாகிஸ்தான் - அவுஸ்திரேலிய தொடர், தென்னாபிரிக்கா - நியூசிலாந்து, நெதர்லாந்து - நியூசிலாந்து மற்றும் இருபது - 20 உலகக் கிண்ணத் தொடர்கள் நடைபெறவுள்ளன. இதனால், இருபது - 20 தொடரை நடத்த முடியாது என்பதால் அதனை கைவிட நியூசிலாந்து - அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபைகள் முடிவு செய்தன. (ஐ)

# வடக்கு - தமிழக மீனவரை மோதவைக்க இராஜதந்திர நகர்வில் ஈடுபடும் அரசு!

## சபையில் சார்ள்ஸ் எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 10

வடக்கு மற்றும் தமிழக மீனவர்களை மோத வைப்பதற்கான இராஜதந்திர நகர்வுகள் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படுகின்றதா என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சபையில் கேள்வி எழுப்பியுள்ளது.

நேற்று இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வில் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் இந்தக் கேள்வியை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் வினவினார்.

இந்திய இழுவைப்படகு பிரச்னைக்கு இரு மாதங்களுக்குள் தீர்வு கிடைக்கும் என அமைச்சர் டக்ளஸ் தேவா



னந்தா கடந்த ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் பாராளுமன்றில் கூறியிருந்தார்.

அவரது இந்த கருத்தை சுட்டிக்காட்டிய சார்ள்ஸ் நிர்மலநாதன், கடலுக்கு செல்பவர்கள் மரணிக்கும் சம்பவங்கள் தற்போதும் இடம்பெறுவதாக ஆதங்கம் வெளியிட்டார்.

அத்தோடு இதனை கண்டு கொள்ளாமல் பிரச்னைக்கு தீர்வை காணாமல் இருப்பது இரு தரப்பையும் மோதவைக்கும் இராஜதந்திர முயற்சியா என்றும் கேள்வியெழுப்பினார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இராஜதந்திர நடவடிக்கை என்ற கருத்து அரசியல் உள்நோக்கத்தோடு எழுப்பப்பட்டது எனச் சாடினார்.

கடந்த 5 வருட ஆட்சியில் எதுவும் செய்யவில்லை என குற்றம் சாட்டிய அமைச்சர், விரைவில் மீனவர்கள் பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும் என்றும் உறுதியளித்தார். (அ)

# நாட்டின் பலதுறைகள் வங்குரோத்து நிலையில்!

## எச்சரிக்கிறார் சம்பிக்க ரணவக்க

கொழும்பு, பெப். 10

எதிர்வரும் மாதம் முதல் பல துறைகள் வங்குரோத்து நிலைமையை அடையும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

உலக சந்தையில் எரிபொருளின் விலை அதிகரிக்கப்பட்ட நிலையிலும் விசேட பெற்றோலுக்காக 60 தொடக்கம் 80 ரூபாய் வரை வரி அறவிடப்படுவதுடன், டீசல் லீட்டருக்காக 20 தொடக்கம் 30 ரூபாய் வரை வரி அறவிடப்படுகிறது.

இலங்கை மின்சார சபைக்கான டீசல் மற்றும் உராய்வு எண்ணெயின் விலை அதிகரித்துள்ளதால் இலங்கை மின்சார சபை பாரிய நிதி நெருக்கடியை எதிர்க்கொண்டுள்ளது.

24 மணித்தியாலமும் மின்சாரத்தை விநியோகிப்பதாக வழங்கிய வாக்குறுதியால் 85 சதவீதமாக காணப்பட்ட நீர்மின்னுற்பத்தி தற்போது 50 சதவீதமாக குறைவடைந்துள்ளது. வங்கி கட்டமைப்பு பெரும் நெருக்கடியை எதிர்க்கொண்டுள்ளது. வைப்பாளர்களுக்கு விநியோகித்த கடன்களில் 52 சதவீத கடனை அரசாங்கம் பெற்றுக் கொண்டுள்ளது. ஏனைய வைப்பாளர்களுக்கு 48 சதவீதம் மாத்திரம் வழங்கப்பட்டுள்ளன. ஊழியர் சேமலாப நிதியத்திலும் மோசடி செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நாட்டில் பயன்படுத்த கூடிய டொலரின் அளவு,வெளிநாட்டு கையிருப்பின் அளவும் தொடர்ந்து குறைந்த மட்டத்தில் உள்ளது. நாட்டில் வெளிநாட்டு கையிருப்பு 500 மில்லியன் அமெரிக்க டொலர்களாக காணப்படுகிறது. முறையற்ற நிதி முகாமைத்துவத்தால் நாட்டின் நிதிக்கட்டமைப்பு பாதிக்கப்பட்டுள்ளது- என்றார். (ஐ)

# குட்டியாராச்சி எம்.பிக்கு தனியான ஒரு வங்கியா?

கொழும்பு, பெப். 10

கிராமிய கூட்டுறவு வங்கிகள் என்ற பெயரில் திஸ்ஸ குட்டியாராச்சி எம்.பி போலி வங்கியை நடத்தி வருவதாகவும், அவ்வாறான போலி வங்கியை செயற்படுத்த அரசாங்கம் ஏன் அனுமதித்தது எனவும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல பதில் கோரும் கேள்வியொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (அ)

# ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளராக சாகல!

கொழும்பு, பெப்.10

ஐக்கிய தேசிய கட்சியின் தேசிய அமைப்பாளராக முன்னாள் அமைச்சர் சாகல ரத்நாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்கவால், சாகல ரத்நாயக்க இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். கட்சியின் தேசிய அமைப்பாளராக முன்னாள் அமைச்சர் நவீன் திஸநாயக்கவை நியமிப்பதற்கு, கட்சியின் செயற்குழு தீர்மானித்திருந்தது.

எனினும், அந்தப் பதவியை ஏற்பதற்கு நவீன் திஸநாயக்க மறுத்ததன் காரணமாக சுமார் ஒரு வருடமாக அந்தப் பதவிக்கு வெற்றிடம் நிலவியது.

இந்நிலையிலேயே அந்தப் பதவிக்கு முன்னாள் அமைச்சர் சாகல ரத்நாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

குறித்த பதவிக்கு சாகல ரத்நாயக்கவை நியமிப்பதற்கான யோசனை கட்சியின் செயல் குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்ட நிலையிலேயே, அதற்கான அனுமதியை கட்சியின் செயல் குழு வழங்கியுள்ளது.

சாகல ரத்நாயக்க வகித்த உபதலைவர் பதவிக்கு இருவரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன என்றும், அந்தப் பதவிக்கு சிறுபான்மை இனத்தவர்கள் இருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார். (கே)

# கட்டுத்துவக்கு வெடித்து புத்தளத்தில் ஒருவர் பலி!

கொழும்பு, பெப். 10

புத்தளம் - பல்லம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தொடுவா பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு கட்டுத்துவக்கு வெடித்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

புத்தளம் ஆண்டிகம பெரிய மடு பகுதியைச் சேர்ந்த 61 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார் என தெரிவிக்கப்பட்டது.

குறித்த நபரால் தயாரிக்கப்பட்டதாக சந்தேகிக்கப்படும் கட்டுத்துவக்கு தவறுதலாக வெடித்துள்ளதாக மேற்கொள்ளப்பட்ட முதற்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்த வெடிப்புச் சம்பவத்தில் படுகாயமடைந்த குறித்த நபரை அங்கிருந்தவர்கள் உடனடியாக சிலாபம் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்த போதிலும், அவர் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என பொலிஸார் கூறினர். (அ)



# மிளகாய் செய்கையை ஆரம்பித்தது இராணுவம்!

கொழும்பு, பெப்.10

பொலநறுவை, கந்தகாடு இராணுவ பண்ணையில், 100 ஏக்கர் நிலப்பரப்பில் மிளகாய்ச் செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இராணுவ தளபதியும் பசுமை விவசாய செயல்பாட்டு மையத்தின் தலைவருமான ஜெனரல் ஷவேந்திர சில்வாவின் அறிவுரைக்கமைய இந்த மிளகாய் செய்கை நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கந்தகாடு பண்ணையின் கட்டளை அதிகாரி லெப். கேணல் நிஷாந்த முத்தந்திரி கேவின் தலைமையில் இந்நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது. (கே)

# நாட்டில் டொலருக்கு தட்டுப்பாடு இல்லை!

## மத்திய வங்கி ஆளுநர் சொல்கிறார்

கொழும்பு, பெப்.10

நாட்டில் தற்போது டொலர் தட்டுப்பாடு இல்லை. இறக்குமதி மற்றும் ஏனைய தேவைகளுக்கு போதுமான டொலர் இருப்பதாக மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.

மத்திய வங்கியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றிலேயே அவர் இதனை தெரிவித்தார். தொடர்ந்து உரைத்த அவர்,

நாட்டில் டொலர் தட்டுப்பாடு காணப்படுமாயின் கடந்த வருடம் முழுவதும் 22 பில்லியன் அமெரிக்க டொலருக்கு பொருட்கள் எவ்வாறு இறக்குமதி செய்யப்பட்டன. அதுமட்டுமன்றி கடந்த மாதம் 2 பில்லியன் டொலருக்கு பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

டொலர் இன்மை காரணமாக நாட்டில் டொலருக்கு தட்டுப்பாடு ஏற்படவில்லை. டொலருக்கான அதிக கேள்வி இருந்ததன் காரணமாகவே டொலருக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது. இதற்கான மாற்றுவழிகள் தொடர்பில் ஆராய்ந்து வருகின்றோம்.

டொலருக்கு அதிக கேள்வி இருப்பது மோசமான விடயம் அல்ல. அதற்காக பொருட்களுக்கான நுகர்வை குறைப்பது சிறந்ததல்ல. டொலரை தேடிக் கொள்வதற்கான மாற்று வழியைத் தேடுவதே சிறந்தது - என்றார். (கே)

# கூட்டு ஒப்பந்தம் மீண்டும் வேண்டும்

## தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, பெப். 10

தொழிலாளர்களின் நலன் கருதி கூட்டு ஒப்பந்தம் மீண்டும் வேண்டும் என கோரி பெருந்தோட்ட தொழிலாளர்கள் நேற்று ஹற்றனில் போராட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

தொழிலாளர்களின் உரிமை சார் விடயங்கள் தொடர்பில் அரசு கவனம் செலுத்த வேண்டும் என இலங்கை தொழிலாளர் செங்கொடி சங்கமும், இலங்கை தொழிற்சங்கங்களின் சம்மேளனமும், தொழிலாளர்களுடன் இணைந்து இந்த போராட்டத்தை முன்னெடுத்தன.

ஹற்றனில் அமைந்துள்ள தொழில் திணைக்களத்திற்கு முன்பாக இடம்பெற்ற இந்த போராட்டத்தில் சுமார் 50ற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

இந்த போராட்டத்தின் போது, தொழில் திணைக்களமே தோட்ட தொழிலாளர்களின் தொழில் உரிமைகள் மீறப்படுவதை உடனடியாக தடுத்து நிறுத்து, தோட்ட தொழிலாளர்களின் ஆயிரம் ரூபா சம்பள உயர்வு நிபந்தனைகள் இன்றி வழங்கப்பட வேண்டும், தொழில் அமைச்சரே கூட்டு ஒப்பந்தம் உடனடியாக மீண்டும் கைச்சாத்திடப்பட வேண்டும் போன்ற வாசகங்கள் எழுதிய பதாதைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பி சுமார் இரண்டு மணித்தியாலயங்கள் இந்த போராட்டத்தை முன்னெடுத்தனர்.

அதன் பிறகு தொழிலாளர்களின் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றையும் தொழில் ஆணையாளரிடம் கையளித்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## பயங்கரவாத...

பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் சில திருத்தங் கள் முன்வைக்கப்பட்டுள்ள போதும் அதில் முக்கியமான கூறுகள் உள்ளடக்கப்படவில்லை என ஐரோப்பிய ஒன்றி யம் சுட்டிக்காட்டியுள்ளது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் பயன் பாட்டைத் தொடர்ந்து குறைக்குமாறும் வலி யுறுத்திய ஐரோப்பிய ஒன்றியம், எந்தவித குற் றச்சாட்டும் இன்றி பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டவர்களை பிணையில் விடுவிக்க வேண்டும் எனவும் கோரியுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம் - இலங்கை கூட்டு ஆணைக்குழுவின் 24ஆவது கூட்டம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிரஸ்ஸல்ஸில் நடை பெற்றது.

இதனைத் தொடர்ந்து இரு தரப்பும் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பில் நல்லிணக்கம், மனித உரிமைகள், வர்த்தகம், ஒத்துழைப்பு, காலநிலை மாற்றம், சுற்றுச்சூழல், பாதுகாப்பு மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

குறிப்பாக காணாமல் போனோர் அலுவலகம், இழப்பீடுகளுக்கான அலுவலகம், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்துக்கான அலுவலகம், இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு, மனித உரிமைகள் பேரவை மற்றும் அதன் பொறிமுறைகளுடன் ஒத்துழைப்பையும் ஈடுபாட்டையும் தொடருமாறு இலங்கையை ஐரோப்பிய ஒன்றியம் ஊக்குவித்தது.

ஐரோப்பிய ஒன்றியமும் இலங்கையும் சிவில் சமூகத்தை வலுப்படுத்துவது மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள் பன்முகத்தன்மையுடன் செயற்படத் தேவையான இடத்தை வழங்குவதன் முக்கியத்துவத்தை ஒப்புக்கொண்டன.

நீதிப் பொறிமுறை மறுசீரமைப்பு மற்றும் நல்லிணக்கத்தில் இலங்கைக்கு ஆதரவளிப்பதற்கான தனது தொடர்ச்சியான அர்ப்பணிப்பை ஐரோப்பிய ஒன்றியம் மீண்டும் வலியுறுத்தியது.

ஐரோப்பிய ஒன்றியமும் இலங்கையும் இரு தரப்பு வர்த்தக உறவுகளின் முக்கியத்துவத்தைக் குறிப்பிட்டன.

இதேவேளை, பல ஐரோப்பிய தயாரிப்புகள் தனது சந்தைக்குள் நுழைவதைத் தடுக்கும் வகையில் இலங்கை விதித்துள்ள இறக்குமதிக் கட்டுப்பாடுகளை உடனடியாக நீக்குமாறு ஐரோப்பிய ஒன்றியம் கடுமையாக வலியுறுத்தியது.

தொற்றுநோயின் தாக்கத்தின் விளைவாக ஏற்பட்ட அந்நிய செலாவணி பற்றாக்குறையைச் சமாளிக்கும் வகையில் இடைக்கால நடவடிக்கையாகவே அத்தியாவசியமற்ற பொருட்களுக்கு தற்காலிக இறக்குமதி கட்டுப்பாடுகளை விதித்துள்ளதாக இலங்கை தெளிவுபடுத்தியது. இந்த நடவடிக்கை மீளாய்வுக்கு உட்பட்டது எனவும் இலங்கை கூறியது.

இலங்கையின் நிலையான அபிவிருத்திக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை மூலம் கிடைத்த பங்களிப்பை இலங்கை பாராட்டியது.

2021 செப்ரெம்பரில் ஜி.எஸ்.பி. வரிச் சலுகை தொடர்பான கண்காணிப்புப் பணியின்போது இலங்கை ஆக்கபூர்வமான ஈடுபாட்டை ஐரோப்பிய ஒன்றியம் ஏற்றுக்கொண்டது. (அ)

## நாட்டை மீண்டும்...

கையொன்றை முன்வைத்தார்.

அநுராதபுரத்தில் நேற்று ஆயிரக்கணக்கானோர் பங்கேற்ற பொதுஜன பெரமுனவின் கூட்டத்தில் உரையாற்றியபோதே ஜனாதிபதி இதனை தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச மிகவும் ஆவேசமாக உரையாற்றினார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்-

உரம் அல்லது உரம் இல்லாமலேயே விவசாய சமூகத்தின் வருமானத்தை 100 வீதம் அதிகரிப்பேன் என்பதைக் கூறிக் கொள்கின்றேன். இன்று நெல்லுக்கு சிறந்த விலை உள்ளது.

அபகரிக்கப்பட்ட நிலங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. விவசாய சமூகத்துக்காக என்னை அர்ப்பணிக்க நான் தயாராக இருக்கிறேன் என்ற உறுதிமொழியையும் வழங்குகின்றேன்.

விவசாயத்துக்கு எதுவும் செய்யாதவர்கள் இன்று விவசாயிகளை ஏமாற்றி, நாட்டை பாதாளத்துக்கு இழுக்க முயற்சிக்கின்றனர்.

தீவிரவாதிகளிடமிருந்து இந்த நாட்டை மஹிந்த ராஜபக்ஷ மீட்டார். அதன்பின்னர் வேகமாக அபிவிருத்திகள் முன்னெடுக்கப்பட்டன.  எனினும், 2015 இல் போலியான தகவல்கள்மூலம் ஆட்சி கவிழ்க்கப்பட்டது. தேசிய பாதுகாப்பு பலவீனப்படுத்தப்பட்டது. இராணுவத்தினர் காட்டிக்கொடுக்கப்பட்டனர். பிக்குகள் நீதிமன்றம் அழைத்துச் செல்லப்பட்டனர். இந்நிலைமையை நாம் மாற்றியமைத்தோம். தேசிய பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தேசிய மரபுரிமைகள் பாதுகாக்கப்பட்டுள்ளன.

மூன்றாவது தடுப்பூசியை பெற்றுக் கொள்ளுங்கள். நாட்டை மீண்டும் முடக்குவதற்கு இடமளிக்க வேண்டாம்-என்றார். (அ)

## சர்வதேசத்தை...

றன எனவும் அவர் நேற்று சபையில் சுட்டிக் காட்டினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்-

ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடர் இம்மாதம் ஆரம்பமாகவுள்ளது. அதேபோல ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை தொடர்பிலும் எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன. எனவே, இவ்விரண்டு விவகாரங்களையும் கையாள்வதற்காகவே பயங்கரவாத தடைச்சட்டம் கையில் எடுக்கப்பட்டுள்ளது. மாறாக இது விடயத்தில் அரசிடம் உண்மையான நல்லெண்ணம் இல்லை-என்றார். (அ)

## அரைக்...

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கடந்த வாரம் யாழ். பல்கலைக்கழகத்தினுள் கனிஷ்ட மாணவன் ஒருவர், பல்கலைக்கழக மாணவன் அல்லாத தன்னுடைய நண்பர் ஒருவருடன் அரைக் காற்சட்டை அணிந்து பல்கலைக்கழக வளாகத்தினுள் வந்துள்ளார்.

இதனை அவதானித்த மூன்றாம் மற்றும் நான்காம் வருட மாணவர்கள் குறித்த மாணவனை அழைத்து அரைக் காற்சட்டையுடன் பல்கலை. வளாகத்தினுள் நுழைந்தமையை கண்டித்து, வளாகத்தை விட்டு வெளியேறுமாறு பணித்துள்ளனர்.

இதன்போது , மாணவனுடன் வந்த பல்கலைக்கழகம் சாராதவர், சிரேஷ்ட மாணவர்களுடன் முரண்பட்டுள்ளார். இதையடுத்து அங்கு வந்திருந்த பல்கலைக் கழக பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் , அரைக் காற்சட்டையுடன் பல்கலைக் கழக வளாகத்தினுள் நின்றவர்களை வெளியேற்றியிருந்தனர்.

இந்தச் சம்பவம் இடம்பெற்ற பின்னர், அரைக் காற்சட்டையுடன் வந்த நபர்களை கண்டித்த சிரேஷ்ட மாணவர் ஒருவர் கல்லுண்டாய் வெளி ஊடாக தனது நண்பர் ஒருவரின் முச்சக்கர வண்டியில் வீடு திரும்பிக்கொண்டிருந்தவேளை, வாகனத்தை வழிமறித்த கும்பல் ஒன்று மாணவன் மீது சரமாரியாக தாக்குதலை நடத்தி விட்டு தப்பி சென்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் பல்கலைக்கழக ஒழுக்காற்று குழுவுக்கு தாக்குதலுக்கு இலக்கான மாணவன் முறையிட்டார். இதைடுத்து, பல்கலைக்கழகத்திற்கு வெளியே நடைபெற்ற சம்பவம் என்பதால், அது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டது. இதற்மைவாக மாணவனால் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (ஐ-3)

## இந்தியத்...

“வடக்கு மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகள் தொடர் பில் இன்று (நேற்று) ஒத்திவைப்பு வேளை பிரேரணை ஒன்றை பாராளு மன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் ஆகிய நான் முன்மொழிந்து பாராளு மன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன் னம்பலம் வழிமொழிந்து விவாதத்தை ஆரம்பிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது.

“இதன் பிரகாரம் குறித்த பிரேரணை மாலை 4. 50 மணியளவில் விவாதத்துக்கு கொண்டுவரப்படும் வகையில் பாராளுமன்றில் அறிவித்தல் பலகையில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. குறிப்பாக, எமது மீனவர்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களை தடுக்காது, அவர்களின் வலைகள் அழிக்கப்படுவதையும், படகுகள் சேதமாக்கப்படுவதையும், மீனவர்கள் தாக்கப்படுவதையும், கொல்லப்படுவதையும் இலங்கை கடற்படையும் இலங்கை அரசும் வேடிக்கை பார்த்து கொண்டிருக்கின்றமை தொடர்பில் குறித்த விவாதத்தை  நடத்துவதற்கு ஏற்பாடு செய்திருந்தோம்.

“இந்த நிலையில், இன்று (நேற்று) நண்பகல் கொழும்பிலுள்ள இந்திய தூதரகத்திலிருந்து அதிகாரி ஒருவர் தொடர்புகொண்டு, எம்மால் முன்னெடுக்கப்படவிருந்த விவாதம் தொடர்பில் கலந்துரையாடினார். இதன்போது நாம், எமது வட பகுதி மீனவர்களின் கடற்றொழிலுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பில், இலங்கை கடற்படை நடவடிக்கை எடுக்காது எமது வட பகுதி மீனவர்களுக்கும் எல்லை தாண்டிவரும் மீனவர்களுக்கும் இடையில் மோதலை தீவிரப்படுத்தி பகைமையை வளர்க்கும் செயல்பாடுகளில் ஈடுபட்டமை தொடர்பில் சபையின் கவனத்தை ஈர்க்கும் நோக்குடன் நாம் குறித்த விவாதத்தை ஏற்பாடு செய்துள்ளோம் என்பதனை தெரிவித்தோம்.

இதன்போது, தூதரக அதிகாரி, இந்தப் பிரச்னை தொடர்பில் தமது தரப்பிலிருந்தும் தாம் அக்கறை செலுத்துவதாகவும், மேற்படி மீனவர் பிரச்னையானது யாழ்ப்பாணத்திலும், தமிழகத்திலும் ஒரு நெருக்கடி மிகுந்த சிக்கல் நிலைக்கு வந்துள்ளதாகவும், அந்த நெருக்கடி நிலையை தாம் புரிந்து கொண்டுள்ளோம் என்றும் அந்த வகையில் இப்பிரச்னையை கட்டுப் படுத்துவதற்கு தாம் முடிவெடுத்துள்ளதாகவும், தாம் மேற்கொள்ளவுள்ள நடவடிக்கைகளுக்கு வாய்ப்பளிக்கும் முகமாக குறித்த விடயத்தை பாராளுமன்றத்தில் விவாதிப்பதை  தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார்கள்.

அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க மீனவர்கள் பிரச்னையை தீர்ப்பதற்கான அவர்கள் முயற்சிக்கு ஒத்துழைக்கும் வகையில் குறித்த பிரேரணையை நேற்று விவாதத்திற்கு எடுப்பதைத் தவிர்த்துக் கொண்டுள் ளோம் - என்று கூறினார். (ஐ)

## கொரோனா...

பரிசோதனை மேற்கொள்வதற்கே பரிசோதனை கருவிகள் இருக்கின்றன என்றும் இதனால் கடுமையான நோய் அறிகுறிகளுடன் வருகின்றவர்களை தவிர சாதாரண நோய் அறிகுறிகளுடன் வருகின்றவர்களை பரிசோதனை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதோடு, இதனால் பரிசோதனை எண்ணிக்கையை மட்டுப்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக மாவட்ட சுகாதார தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

மேற்படி 800 பரிசோதனை கருவிகள் ஒரு சில நாட்களில் முடிவடைந்து விடும் என்றும் அதற்கு பின்னர் கொழும்பிலிருந்து பரிசோதனை கருவிகள் கிடைக்கப் பெற்றாலே தொடர்ந்தும் பரிசோதனைகளை மேற்கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது மீண்டும் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## முடிந்தால் அடுத்த...

வின் மக்கள் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டு மக்களை சிந்தித்து ஜனாதிபதியினால் பல்வேறு தீர்மானங்கள் எடுக்க நேரிட்டது. அடுத்த ஜனாதிபதித் தேர்தலை குறித்து சிந்தித்து தீர்மானங்கள் எடுக்கப் படவில்லை.

இரசாயன உரத்தை தடை செய்தோம். மக்களின் ஆரோக்கியதற்காக இந்த கடுமையான தீர்மானத்தை ஜனாதிபதி எடுத்தார். நாங்கள் எடுத்த அனைத்து விடயங்களிலும் எங்களுக்கு எதிராக பல தரப்பினர் செயற்பட்டனர்.

சீனாவின் தடுப்பூசிக்கும் தவறான கருத்துக்களை வெளியிட்டார்கள். உலகின் சிறந்த தடுப்பூசி என கூறப்படும் பைசருக்கும் தவறான பிரசாரங்களை முன்னெடுத்தார்கள்.

இந்த நாட்டு விவசாயிகளின் பிரச்னை என்ன என்பது எங்களுக்கு நன்றாக தெரியும். ஏன் என்றால் நாங்கள் விவசாயக் குடும்பத்தில் இருந்தே வந்தோம்.

நாங்களே நெல்லுக்கு அதிக கட்டணத்தை செலுத்தினோம். விவசாயிகள் நஞ்சருந்தி தற்கொலை செய்துகொண்ட காலங்களும் இருந்தது. எனினும் நாங்கள் அதனையும் மாற்றியமைத்தோம்.

அடுத்த தேர்தல்கள் குறித்து செயற்பட்டிருந்தால் போரையேனும் வெற்றிக் கொண்டிருக்க முடியாது. இறக்குமதியை தடை செய்தோம். அதனால் எவ்வளவு பெரிய சவாலுக்கு முகம் கொடுக்க நேரிடும் என எங்களுக்கு தெரியும்.

எனினும் நாங்கள் நாட்டுக்காகவே அனைத்தையும் செய்தோம். இன்று முதல் ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கையை உங்களிடம் எடுத்து வருகின்றோம்.

முடிந்தால் எதிர்க்கட்சியை அடுத்த தேர்தலில் வென்று காட்டுமாறு சவால் விடுகிறேன்-என்றார். (அ)

## இலங்கை...

பின்புலத்திலுமே மோடி கொழும்பு வரவுள்ளார்.

இந்திய பிரதமரின் இலங்கை விஜயத்துக்கு முன்னதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் இலங்கைக்கு வருவார் எனவும் அந்த செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தியாவுக்கு பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சரிடம் இது பற்றி தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. (அ)

## சாதாரண...

தற்போது காலஅவகாசம் நீடிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk அல்லது றறற. onlineexams.gov.lk எனும் உத்தியோக பூர்வ இணையத்தள முகவரிகளுக்கோ அல்லது பரீட்சைகள் திணைக்களத்தின் நுஒயஅ ளுசடையமெய எனும் முகவரிக்கோ பிரவேசித்து சாதாரண தர பரீட்சைக்கு ஒன்லைன் ஊடாக விண்ணப்பிக்க முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## வடக்கில் மேலும்...

ளப்பட்ட பரிசோதனைகளில் குறித்த தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதனடிப்படையில்,

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வு கூடத்தில் நேற்று 117 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் 20 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையில் - 15 பேர்

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் - 02 பேர்

வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் - 02 பேர் (உயிரிழந்த முதியவர் உட்பட)

நொதேர்ன் சென்றல் வைத்தியசாலையில் - ஒருவர்

அதேபோல் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் 48 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் 08 பேருக்கு (யாழ்.போதனா வைத்திய சாலை) தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு பெண்கள் 13 பேர் உட்பட 28 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

ஈழநாடு
Eelanadu




# மைத்திரி அரசாங்கம் ஏமாற்றிய ஐந்தாண்டு நிறைவில் போராட்டம்!

வவுனியா, பெப். 10

**எமது கோரிக்கைகளை தீர்த்து வைப்பதாக அலரி மாளிகையில் வைத்து மைத்திரி அரசாங்கம் எமக்கு உறுதியளித்து நேற்றுடன் 5 வருடங்கள் கடந்துள்ளன என்று வவுனியா காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.**

வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நடத்தும் போராட்டப் பந்தலுக்கு அண்மையாக 1818ஆவது நாளான நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத் தியபோதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

இதன்போது அவர்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு,

இலங்கை அரசாங்கத்தின் துரோகத்தின் ஐந்தாம் ஆண்டு நினைவேந்தல் இன்று (நேற்று). அலரிமாளிகையில் அரசாங்கத் தரப்பினருடான சந்திப்பு இடம்பெற்று இன்றுடன் (நேற்றுடன்) ஐந்தாவது ஆண்டு முற்றுப்பெறுகின்றது.

ஐந்துஆண்டுகளுக்கு முன்பு சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை வவுனியாவில் நாம் நடத்தினோம். அதனை கைவிடுமாறு எங்களை அணுகிய மைத்திரிபால சிறிசேன அரசாங்கம், எங்கள் கோரிக்கையை தீர்க்க எங்களை அலரிமாளிகைக்கு அழைத்தது.

அரசாங்கத்திடம் எங்களின் கோரிக்கைகளான தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்தல், பயங்கரவாத சட்டத்தை ரத்துசெய்தல், காணாமல் ஆக்கப்பட்ட அனைத்து தமிழர்களையும் விடுதலை செய்யவேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்திருந்தோம். அதற்கு இணங்குவதாக இலங்கை அரசாங்கம் உறுதியளித்திருந்தது.

அவர்கள் அனைவரும் தங்களின் தீர்மானத்தினை எடுத்துவிட்டு விரைவில் எங்களை தொடர்புகொள்வதாக உறுதியளித்தனர். ஆனால், 5 வருடங்கள் கடந்தும் எங்களை அழைக்கவோ - பார்க்கவோ இல்லை.

சாகும்வரையிலான உண்ணாவிரதம் என்ற எங்களது போராட்டத்தை சிதைப்பதற்காகவே அவர்கள் அன்று எம்மை அலரிமாளிகைக்கு அழைத்து ஏமாற்றினர் - என்றனர். (ஐ)

## மரண அறிவித்தல்



பிறப்பு 25 - 02 - 1959

இறப்பு 05 - 02 - 2022

### முருகேசு பாலசிங்கம் (வசந்தன்)

EL SOL Restaurant உரிமையாளர் – Germany,
முன்னாள் CEO – சாவகச்சேரி

யாழ். வரணி இயற்றாலை புத்தூர் கிழக்கைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனி Bremen ஐ வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு பாலசிங்கம் அவர்கள் 05.02.2022 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை முருகேசு, மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மகனும், சின்னத்துரை நேசம்மா தம்பதிகளின் மருமகனும், பரமேஸ்வரி அவர்களின் ஆருயிர்க் கணவரும்,நிருபா, நிஜிதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், அருள் முருகன் அவர்களின் மாமனாரும்,காலஞ்சென்ற சரஸ்வதி, பாலரத்னம் மற்றும் யோகேஸ்வரி, கமலாதேவி, சிவகாமிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும், சின்னத்தம்பி, சிவராணி, தியாகேசு, கணபதிப்பிள்ளை, முதலிக்குட்டி ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற சுப்ரமணியம், நவரத்னம் மற்றும் மகேஸ்வரி, தங்கராசா, நகுலேஸ்வரி, காலஞ்சென்ற பத்மாவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

கிரியை :
Thursday, 10 Feb 2022 11:00 AM
GE·BE·IN Bestattungsinstitut Bremen GmbH
Nordstraße 5-11, 28217 Bremen, Germany

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
**மோகன் - மருமகன்**
**Mobile : +4917643239511**

தகவல்:
**குடும்பத்தினர்**

# துன்னாலை பகுதியில் சிறப்பாக நடந்த நெல் அறுவடையும் பொங்கல் விழாவும்

யாழ்ப்பாணம், பெப். 10

வடமராட்சி - துன்னாலை கிழக்கு கமக்கார அமைப்பு கரவெட்டி கமநல சேவை நிலையத்துடன் இணைந்து நடத்திய நாள் நெல் அறுவடை விழாவும் பொங்கல் விழாவும் நேற்று பிற்பகல் 2:30 மணியளவில் துன்னாலை கிழக்கு புளியங்கியான் சிதம்பர விநாயகர் ஆலய முன்றலில் துன்னாலை கிழக்கு கமக்கார அமைப்பு தலைவர் வே.சிவசிதம்பரம் தலைமையில் இடம்பெற்றது.

இதில் முதல் நிகழ்வாக விருந்தினர்கள் பாரம்பரிய முறைப்படி வயலுக்கு சென்று நெல் அறுவடை செய்ததுடன் அதனை கொண்டுவந்து ஆலய முன்றலில் பாரம்பரிய முறைப்படி பொங்கல் நிகழ்வு இடம்பெற்றது.

அதனை தொடர்ந்து பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ். மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் இ.நிசாந்தன், சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட கரவெட்டி கமநல சேவை அபிவிருத்தி



உத்தியோகத்தர் செ.திலீப்குமார், துன்னாலை கிழக்கு புளியங்கியான் விநாயகர் ஆலய அர்ச்சகர், பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர் தர்சன் மற்றும் விருந்தினர்கள் மலர்மாலை அணிவிக்கப்பட்டு நிகழ்வு மண்டபத்துக்கு அழைக்கப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இதில் ஆசி உரையை ஆலயக் குரு முதல்வர் வழங்கியதை தொடர்ந்து வரவேற்புரை, தலைமை உரை என்பன இடம்பெற்றன.

தொடர்ந்து கருத்தரையை கரவெட்டி கலநல சேவைகள் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் செ.திலீப்குமார், சிறப்பு உரையை யாழ்.மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் இ.நிசாந்தன் ஆகியோர் நிகழ்த்தினர்.

இதில் துன்னாலை கிழக்கு கமக்கார அமைப்பு பிரதிநிதிகள், கரவெட்டி பிரதேச செயலக அதிகாரிகள், விவசாயிகள் என பலரும் கலந்து கொண்டனர். (அ-02)

# முகக்கவசம் வாங்குவதற்காக ரூ. 18,000 கோடி செலவழிப்பு!

கொழும்பு, பெப். 10

கோவிட் -19 தொற்று நிலைமை இலங்கை மக்கள் கடந்த இரண்டு வருடங்களில் மாத்திரம் முகக்க வசக் கொள்வனவுக்காக 18,000 கோடி ரூபாய்க்கும் அதிக தொகையை இலங்கையர்கள் செலவிட் டுள்ளனர் என்று நுகர்வோர் அலுவல்கள் அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் வாழ்க்கை செலவு பெருமள வில் அதிகரித்துள்ள நிலையில், அதனை ஈடுசெய்ய முடியாது நாட்டு மக்கள் இன்னல்களை அனுபவித்து வரும் நிலையில் முகக்கவச கொள்வனவுக்குாக நாட்டு மக்கள் அதிக தொகையை செல விட வேண்டியுள்ளதாக தெரிவித்த அவர், எதிர்வரும் காலங்களில் முகக் கவசங்களின் விலைகளை கட்டுபடுத்து வதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கை களை எடுக்க வேண்டும் என்றும் கூறினார்.

மேலும், இரண்டு அல்லது மூன்று குழந்தைகள் பாடசாலை செல்லும் குடும்பத்தில் அன்றாடம் முகக்கவசத் திற்கான செலவு அதிகரித்துள்ளது. நாட்டிலும் முகக்கவசங்களுக்கான கேள்வி அதிகரித்துள்ள நிலையில் சந்தையில் அதிகபடியான விலைகளில் இவை விற்கப்படுவதாக சுட்டிக் காட்டியுள்ளார்.

நாட்டில் பேருந்து கட்டணங்கள் மற்றும் அத்தியவசிய பொருட்களுக்கான விலைகளும் அதிகரித்த நிலையில் தினமும் நாளொன்றுக்கான முகக்கவசம் கொள்வனவு செய்வதற்கு வறிய நிலை மக்களுக்கு முடியாது உள்ளதாகவும் இது தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்பினர் இதுவரையில் பேசாமல் மௌனமாக இருப்பதாகவும் அந்த அதிகாரி கூறினார். (ஐ)

# வவுனியாவில் உயிரிழந்த முதியவருக்கு கொரோனா!

வவுனியா, பெப். 10

வவுனியாவில் உயிரிழந்த முதியவர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் குறித்த தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதனடிப்படையில்,

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலை வெளி நோயாளர் பிரிவு ஊடாக பெறப்பட்டிருந்த மாதிரி பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதில் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதன்போது உயிரிழந்த நிலையில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்த அமிர்தவல்லி - பத்மநாதன் (வயது-75) என்ற முதியவருக்கே தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 10.02.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.


# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து வழங்குபவர் உளவள துனையாளர் திரு.நா.நவராஜ்
7.15 மணி : கதைவழி அறமொழி-ஜோன்சன் ராஜ்குமார் ஆசிரிய ஆலோசகர்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ - மறுஒளிபரப்பு

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : நலம்தானா-மறுஒளிபரப்பு
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-வேலையில்லா பட்டதாரி, ஜக்சன் துரை திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : வெள்ளித்திரை

**இரவு**
7.00 மணி : சமையல் சமையல்



7.30 மணி : வெள்ளிடை நுட்பம்-தொழில்நுட்பம் பயன்பாடுபற்றிய நிகழ்ச்சி
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : கச்சேரி ஆரம்பம்



10.00 மணி : நேருக்கு நேர்-அரசியல் நிகழ்ச்சி

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : திரைப்படம்

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : திரைப்படம்
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : அன்னை மரியா (மறுஒளிபரப்பு சனி)
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஞானவழி மறு ஒளிபரப்பு ஞாயிறு

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்